காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 ஆனி 16 (30-6-74) | இதழ்: 50

சீரணி அறிவகப் பொறுப்பாளர்,
35-36, வது வட்டங்கள்,
பூங்கா நகர்த் தொகுதி,
36, ரோட்டிக்கிடங்கு திருவேங்கட முதலி தெரு,
சென்னை ,7:

★

கலைஞர்

பொன்விழா

சிறப்பிதழ்

★

விலை: 0-50 காசு

எங்கள் கலைஞர் என்றும் வாழ்க!

பல்லவ
திரைப்பட விநியோகம்

விழுப்புரம் நெடுஞ்சாலை, தலைமை அஞ்சல் நிலையம், புதுவை-1.

பல்லவ மூவீஸ் வெளியீடு!

கல்யாணமாம் கல்யாணம்

1வது: **கீதா சித்ராவின்**

“கல்யாணமாம் கல்யாணம்”

ஜெய்சங்கர், ஜெய்சித்ரா, K. A. தங்கவேலு, தேங்காய் சீனுவாசன்.

2வது: **சித்ரமகாலின்**

“உங்கள் விருப்பம்”

(இயக்குனர்: K. கிருஷ்ணமூர்த்தி)

ஜெய்சங்கர், ஜெய்சித்ரா, K. A. தங்கவேலு, V. K. ராமசாமி, வாசு,
தேங்காய் சீனுவாசன், மனோரமா.

வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு, சித்தூர், பாண்டிச்சேரி உள்பட
தொடர்புகொள்ளும் முகவரி:-

பல்லவ திரைப்பட விநியோகம்

அண்ணா திரையரங்கு

பாண்டிச்சேரி — 605001.

C. V. M. அண்ணாமலை,
சமூக நலத்துறை அமைச்சர்.

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் பொன்விழாவினை யொட்டி கலைஞர் பொன்விழா மலர், "காஞ்சி" தமிழ் கிழமை இதழின் சார்பாக வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண்டுக்கு ஆண்டு தமது பிறந்தநாள் விழாவின் போது புதிய புதிய சமுதாய நலத் திட்டங்களை அறிவித்து, சீர்பெற செயல்படுத்தி வரும் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டும் இந்திய துணைக்கண்டமே வியந்து போற்றத்தக்க மாபெரும் திட்டம் ஒன்றினை அறிவித்திருக்கின்றார்கள். அவரது சீரியப் பணிகளை தமிழக மக்கள் என்றும் நினைவு கூறுவார்கள், அத்தகைய சிறப்பு மிக்கத் தலைவரின் பிறந்த நாளினைச் சிறப்புறச் செய்யும் வகையில், வெளிவர இருக்கும் மலர் சிறக்க எனது நல்வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

C. V. M. அண்ணாமலை,

24—5—74

கலைஞர் ஓர் ஆசிரியர்!

(கா. வேழவேந்தன், பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ.)



கலைஞர் ஓர் ஆசிரியர்! அவரோ நித்தம்
கற்பிக்கும் பாடங்கள் நூறு, நூறு!
வலைவிரிக்கும் எதிர்க்கட்சி வம்ப ருக்கே
வகுப்பறையில் கோலெடுத்துப் பாடம்
சொல்வார்!

விலையில்லா வைரமெனக் கருத்தை யெல்லாம்
விதவிதமாய் நம் நெஞ்சில் எழுதி வைப்பார்!
அலை அலையாய் எதிர்ப்பென்னும் தேர்வு வந்தால்
அத்தனையும் வென்றிங்கே நிமிர்ந்து நிற்பார்!

உழைப்பென்றால் தேனீயைத் தோற்க டிக்கும்
ஒப்பற்ற நல்லாசான் இவரே யன்றோ?
கழைக் கூத்தை நடத்துபவர் போலே வாழ்வில்
கணங்கணமும் சோதனையில் நீந்தி வெல்வார்!
அழைக்கின்ற தொண்டருளம் குளிர்வதற்கே
அன்றாடம் பம்பரம்போல் சுழன்று செல்வார்!
மழைப்பேச்சில் நனைந்திடுவார்! பதிலைக் கேட்டு
மறுப்பேச்சு பேசுகின்ற எதிரி யுண்டா?

நெஞ்சத்தில் நினைவெடுக்கும் கணக்கைப் போட்டு
நேரத்தில் முடித்திடுவார்! மறந்தோ ருக்குக்
கொஞ்சுதமிழ்ப் பாடத்தைச் சுவையாய்ச் சொல்லி
கூரேற்றி வைத்திடுவார்! கானில் ஆடும்
மஞ்ஞையதன் ஆட்டத்தைக் கவிதை பாடும்!
மக்கள்நெஞ்சம் இவர்பேச்சில் மயங்கி ஆடும்!
நெஞ்சுறுதி வேண்டு மென்பார்; 'காஞ்சிப்பாடம்'
நிறைவோடு பயின்றவரே கலைஞர் அன்றோ?

வகுப்பறையே இவர் ஏறும் மேடை! அங்கே
வந்துதிரும் சொற்களெலாம் இவரின்பாடம்!
தொகைதொகையாய் வரலாற்றை எடுத்துக் காட்டி
தொடைநடுங்கிக் கிடப்போரை நிமிரவைப்பார்!
வகுத்தல் என்றும், கூட்டல் என்றும் கூறுகின்ற
வாய்ப்பாடோ இவர்கூறும் 'தமிழர் மேன்மை'!
புகுந்திட்ட இந்தியெனும் பாடை வாடை
போய்ஒழியச் சாடிநின்ற ஆசான் அன்றோ?

கருணாநிதிக்கு நிகர் கருணாநிதிதான்!

தம்பி கருணாநிதியினுடைய ஆற்றல் பற்றியும், ஆற்றல் காரணமாகப் பெற்ற வெற்றிகள் பற்றியும், வெற்றிகளெல்லாம் நாட்டு முன்னேற்றத்துக்குப் பயன்பட்டன என்பது பற்றியும் அந்த ஆற்றலும் வெற்றியும் நாட்டுக்கு இனியும் நல்ல முறையில் பயன்படும் என்பது பற்றியும் நண்பர்கள் பலர் எடுத்துச் சொல்லக் கேட்பதில் எனக்கு மிகுந்த பெருமிதம் உண்டாகும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றும் ஒவ்வொருவரும் பல்வேறு வகையான அறிவாற்றலைப் பெற்றிருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் அவர்கள் பெற்றிருக்கும் ஒவ்வொரு அறிவாற்றலையும் கழகத்தின் மூலமாக நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் தக்க முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதை நினைவூட்டத் தக்க விதத்தில் இந்தப் பிறந்த நாள் விழாக்கள் நடத்தப்படுகின்றன.



நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர், இளமைப் பருவத்தில் உள்ளவர், இந்த அளவு இலக்கியத்துறையிலே தேர்ச்சி பெற்றிருக்கிறார். அதன் மூலம் இலக்கியத்துக்கு வளர்ச்சி கிடைக்கிறது

மற்ற எல்லா வகையான பாராட்டுகளையும்விட பாசத்தோடு தரும் பாராட்டுக்குத் தனி மதிப்பு நிச்சயமாக உண்டு கருணாநிதியின் எழுத்து வல்லமை, பேச்சு வல்லமை, நாடக நூல்களை எழுதிய வல்லமை, நாடகங்களில் நடித்த திறமை இவைகள் ஒவ்வொன்றையும் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

கருணாநிதி இத்தகைய திறமைகளைப் பெற்றிருப்பது எவ்விதம் என்பதை உணர்ந்தால்தான் இந்தப் பாராட்டு விழாவின் உட்கருத்துப் புரியும். வண்ணமாக எண்ணத்தை மிகச் சிறுய பருவத்தில் பெற்றவர் கருணாநிதி. அவர் இளமைப் பருவ முதல் நாட்டு மக்களுக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தோடு சில எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு கையேட்டுப் பிரதிகள் மூலமாகச் சொல்லி, கட்டுரை வடிவத்தில், கவிதை வடிவத்தில், நாடக வடிவத்தில் சினிமாத்துறை மூலம் சொல்லி இன்றைய தினம் அமைச்சராக இருந்து அந்த எண்ணங்களுக்கெல்லாம் அமைச்சர் என்ற முறையில் எந்த அளவுக்கு வடிவம் கொடுத்து வருவதை நாமெல்லாம் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறோம்.

கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட ஒருவர் பொறுப்புகளை நிறைவேற்றுவாரா என்பதில் சிலருக்கு ஐயப்பாடு இருந்தது. ஒரு நல்ல கலைஞர், சிறந்த கலைஞரென்றால் அவர் கலையில் எந்த அளவு திறமை காட்டுகிறாரோ அந்த அளவு திறமை அவர் எடுத்துக்கொண்ட பொறுப்பு ஒவ்வொன்றிலும் காட்டுவார் என்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

முறைப்படுத்துவதுதான் கலை; அந்த முறைப் படுத்தப்பட்ட பண்பைப் பெற்ற கலைஞர்கள் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதை முறைப்படுத்தி, அதற்குக் கலைமெருகேற்றி அந்தப்பயனைப் பிறர் பெறும்படி செய்வார்கள். அந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டதுபோல் வேறுபலருக்கு ஏற்பட்டு கருணாநிதி அவர்கள் ஒருவருடம் அமைச்சரவையிலே ஆற்றிய பணி, அதற்கு முன்னால் பத்து ஆண்டுகளாகச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே ஆற்றிய அரிய தொண்டு ஆகியவைகளை எல்லாம் அறிந்து உணர்ந்து மகிழ்ந்து பாசத்தோடு பாராட்டியிருக்கிறார்கள்.

எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலே எளியோருக்காக நடத்தப்படும் இயக்கம், எளிமையிலேயே இருக்க வேண்டும் என்று யாரும் கருதக்கூடாது. அது நேர்த்தியான நிலைக்குச் செல்ல வேண்டும். அந்த தேர்த்தியான நிலை அதிலே ஈடுபட்ட ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலே அடைகிற நேர்த்தியான நிலைமட்டுமல்ல. அவர்களின் கூட்டு முயற்சியாலே கழகம் அடையும் நேர்த்தியான நிலைமட்டுமல்ல. அதன்மூலம் நாடு அடையும் நேர்த்தியான நிலைதான் நிச்சயமாக எளிய குடும்பத்திலே பிறந்தவர்கள், எளியோர்களுக்காக இருந்தவர்களை நேர்த்தியான நிலைக்குக் கொண்டுவந்தது என்ற வரலாற்றிலே பொறிக்கப்படத்தக்க ஒரு சாதனை நமக்குக் கிடைக்கவேண்டும்.

அப்படிக் கிடைக்க வேண்டுமென்றால் கருணாநிதியைப் போல் இந்த திறமைகளைப் பெற வேண்டும் என்பது மட்டுமல்ல அந்தத் திறமைகளை எப்படி பெற்றார் என்பதைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும்.

ஒரு நாளைக்குக் கருணாநிதி எத்தனை மணி நேரம் தூங்குகிறார் என்பதை யாராவது அவருக்குத் தெரியாமல் பார்த்தால்தான் இந்தத் திறமை பெற்றதன் அடிப்படை, உழைப்பு என்பதை உணர்வீர்கள்.

பேரறிஞர் அண்ணா

உழைக்காமல் இந்தத் திறமை வந்துவிடவில்லை. உழைக்காமல் ஒரு திறமை வராது. சில பேருக்கு வரலாம், சாதுக்களுக்கும் சன்னியாசிகளுக்கும்; அதுகூடச் சில வருடங்களுக்குப் பிறகு நிலைப்பதில்லை என்று அந்த வட்டாரத்தில் உள்ளவர்களே சொல்லிக் கொள்கிறார்கள். நம்மைப்போன்ற சாமான்ய மக்கள் உழைப்பின் மூலம் தான் அந்தத் திறமையைப் பெற முடியும்.

சிலப்பதிகாரத்தை கருணாநிதி இன்றைய நடைக்கு ஏற்ற அளவில் ஆக்கித் தந்திருக்கிறார் என்றால் அதற்கு நூறு முறையாவது முறைப்படி படித்திருப்பார்.

சங்க இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்; இலக்கணத் துறையிலேயேயும் பயிற்சி பெற வேண்டும் என்ற மிகுந்த ஆர்வம் படைந்தவர். நமக்குத்தான் ஒரு புகழ் வந்துவிட்டதே; இனி நமக்குத் தமிழ் இலக்கணம் தேவையில்லை என்று எடுத்தெறிந்துவிட்டுக் காரியங்களைச் செய்கிற முறையில் அல்லாமல், அவருக்குக் கிடைக்கக் கூடிய நேரம் குறைவாக இருந்தாலும் இதிலே நாம் பெற்றிருக்கிற அறிவாற்றலை வளப்படுத்திக் கொள்வதற்கு அதனை மிக நல்ல முறையிலே பயன்படுத்துவார்கள்.

கடுமையான உழைப்பு என்று நான் குறிப்பிட்டேன்; கடுமையான உழைப்பு செய்தற்கேற்ற உடல் வளம் ஒரு துளியும் கிடையாது பேசுகிறபோது வீரம் சொட்டும். வீட்டுக்குச் சென்ற உடனே மருந்துச் சொட்டுகள் உள்ளே செல்லும். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு வீட்டிலே உள்ளவர்கள் கன்னத்திலே கை வைத்துக் கொள்பவர்களும், முகவாய்க்கட்டைத் தடவிக் கொள்பவர்களும், பெரியவர்களாக உள்ளவர்கள் தலையையே தட்டிக் கொள்பவர்களும், ‘இப்படிப் போய் அலைவானேன், இப்படி வந்து அலறுவானேன், இப்படிப்போய் வேலை செய்வானேன், இங்கு வந்து இப்படி துடிப்பானேன்’ என்று கவலைப்பட்டுக் கொள்பவர்களும், சுற்றி இருக்கிற டாக்டர்கள் “இது இந்த வியாதியாக இருக்குமா, அந்த வியாதியாக இருக்குமா” என்று அவர்களுக்குள்ளே பேசிக்கொள்வதையும் நீங்கள் பார்த்தீர்களானால் அந்தக் கடும் உழைப்புக்கு ஏற்ற உடற்கட்டு அவரிடத்திலே இல்லை.

எப்படியோ சொல்லி வைத்தாற்போல் தமிழ் நாட்டின் தலைவர்களில் யாருக்கு உடற்கட்டு இருக்கிறதோ, அவர்கள் தங்களது உடற்கட்டை வேறு பல காரியங்களுக்கு பயன்படுத்துகிறார்களே தவிர இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. உடற்கட்டு துளியுமில்லாத மா. பொ. சி. போன்றவர்களும் கருணாநிதியைப் போன்றவர்களும் தான் கடுமையாக உழைத்துவிட்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டோ மருத்துவமனையில் படுத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட கடுமையான உழைப்புக்குக் காரணம் நாம் பெற்றிருப்பது நாட்டுக்கு அளிப்பதற்குப் போதாது என்ற அடக்க உணர்ச்சிதான். “எனக்கு எல்லாம் தெரியும்” என்று ஒருவர் எண்ணியவுடன் அவருடைய சரித்திரத்தை எழுதி மலிவுப்பதிப்பு வெளியிட்டு இரண்டாம் பதிப்பு வராது என்று உலகத்துக்கு அறிவித்து விடலாம்.

இன்னமும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது என்ற உணர்வைப் பெற்றவர்கள்தான் உலகத்துக்கு நிறைய அளிக்கத்தக்கவர்கள். அந்த ஆர்வத்தால்தான் கடுமையாக உழைக்கிறார்கள். அந்தக் கடுமையான உழைப்பில் கருணாநிதியின் உழைப்புக்கும் மற்றவர்களின் உழைப்புக்கும் ஒரு மாறுபாடு இருக்கிறது. சிலர் சில நிலை அடைந்த பிறகு “நான் இன்னின்ன காரியத்தைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் இன்னின்ன காரியத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்” என்று கூறுவார்கள். சிலர் சில காரியங்களில் ஈடுபடுவார்கள். அதே சமயம் வேறு காரியங்களைக் கவனிப்பார். இது சிலருக்கு அமைந்திருக்கும் இயற்கையான இயல்பு. ஆனால் அப்படிப்பட்ட முறையில் அல்லாமல் கழகத்தால் எந்த வேலை கொடுத்தாலும் அல்லது கழகத்திற்காக எந்த வேலையை செய்ய வேண்டுமென்று அவரே கருதினாலும் “அதே வேலையை நாம்தான் செய்வதா? அதை இன்னார் செய்யக்கூடாதா? நாம் இன்னொரு வேலையைச் செய்யலாமோ” என்ற பாகுபாடு பார்க்காமல் எப்படிப்பட்ட வேலையானாலும், திருவாரூரிலே படித்துக் கொண்டிருந்த மாணவப் பருவத்தில் இருந்த நிலையில் இருந்து கழகத் தொண்டர் என்ற நிலைக்கு வளர்ந்து கழகத் தலைவர்கள் வரிசையிலே வந்து அமைச்சரான பிறகும் இன்னின்ன காரியங்களை நாம் செய்யலாமா என்ற பாகுபாடு வைத்துக்கொள்ளாமல் எந்தக் காரியமானாலும் அதைச் செய்து முடிக்கின்ற உணர்ச்சி கருணாநிதியிடம் இருக்கிறது. மா. பொ. சியும் சட்ட மன்றத் தலைவர் அவர்களும் சொன்னார்கள் கருணாநிதியைத் தாக்க சிலர் முயன்றார்கள் என்று. இதிலே நான் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் தாக்க முற்படாமல் இருப்பார்களேயானால் தான் நான் உள்ளபடி ஆச்சரியப்பட்டிருப்பேன். ஒரு பேரறிவாளர் சொன்னார் “உன்னை யாருமே குறை கூறவில்லையென்றால் கொஞ்ச காலம் கவலைப்படு. மற்றவர்கள் மனதை உறுத்தும்படியான வகையில் விஷயத்தைச் சொல்லத் தவறிவிட்டாய் என்பதுதான் அதனுடைய பொருள்” என்று!

அதைப்போல தி. மு. கழகம் அல்லது அதன் அமைச்சர்கள் அல்லது தலைவர்கள் அல்லது தொண்டர்கள் தாக்குதலுக்கு ஆளாகிறார்கள் என்றால் அவர்கள் முதலிலே கேள்விக்குறியாக இருந்தவர்கள்; இன்றைய தினம் ஆச்சரியக்குறியாக மாறியவுடன் பலருக்கு அதனாலே அறுவறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு மிகுந்த அறுவறுப்பு சூழ்நிலைக்கு மத்தியில் நம்முடைய கழகம் அரசு அமைத்து நடத்திக் கொண்டிருக்கிறது.

சிவப்புத் துணிக்கு அஞ்சாத எருதும் எதிர்க்கட்சி அரசாள ஆரம்பித்தால் அஞ்சாத முன்னாள் ஆளும் கட்சியும் நம்முடைய நாட்டிலல்ல உலகத்திலே கூட இருப்பதற்கில்லை.

அந்த ஆத்திரத்தில் செய்யப்படும் காரியங்கள் தாக்குதலிலே முடிகிறது என்று சொல்லப்படுமானால் நான், கருணாநிதி அமைச்சரான போது அடைந்த மகிழ்ச்சியைவிட அவர் மாற்றாரால் அமைச்சர் என்ற முறையில் தாக்கப்படுவாரானார் நிமிர்த்த நடைபோட்டு என் தம்பி எதையும் ஏற்றுக் கொள்கின்றவன் என்று சொல்வேன்.

நாங்கள் எங்கள் மீது ஈ எறும்பு விழாது என்று

சொல்லத்தக்க அளவாலே உள்ளவர்களல்ல: எங்களை உருட்டிவிட்ட அழுக்குப் பள்ளங்கள் ஏராளம். நாங்கள் ஏறி இறங்கிய மலைச்சரிவுகள் நிரம்ப உண்டு. நாங்கள் கண்டு அதிலே சிக்காமல் தப்பிய சதிகள் பல, சந்தித்த எதிர்ப்புகள் மிகப் பல. அவை களுக்குப் பிறகு இன்றைய தினம் இந்த நிலை அடைத்திருக்கிறோமென்றால் மறுபடியும் எங்களை அதே கொடுமைக்கு ஆளாக்குகின்றவர்களை நான் பணிவன்போடு கேட்கிறேன். இன்னும் எந்த உயரத்துக்கு எங்களை அழைத்துச் செல்ல நீங்கள் இந்தக் கொடுமை செய்கிறீர்கள்?

எங்களைத் தூற்றினீர்கள். மக்கள் போற்ற ஆரம்பித்தார்கள், நீங்கள் அடித்தீர்கள். மக்கள் அணைத்துக்கொண்டார்கள். எங்களை அலட்சியப் படுத்தினீர்கள். மக்கள் எங்களை அரசாளும் பீடத்தில் அமர்த்தினார்கள்.

இன்னமும் அதே காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். இதைவிடப் பெரியது இருப்பதாக எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இன்னும் என்ன பெரிய நன்மையை எனக்குத் தருவதற்காக என்னுடைய மாற்றார்கள்—நீங்கள் இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறீர்கள்? ஏன் என்று அறியாமல்தான் திகைக்கிறேன்.

உள்ளபடியே எங்களுடைய அமைச்சர்களிலே யாராவது ஒருவர் இந்தத் தாக்குதலுக்கு ஆளாகி இறந்துபடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றில் முற்றுப்புள்ளி வைக்கிறபொழுது, படித்து முடிக்கின்றனர் கண்ணீரோடு. "ஆ! செத்தானா பரவாயில்லை" என்றா முடிப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திராவிடர் கழகமாக இருந்த காலத்திலே அவர் நாடகம் எழுதி, பல நாடகக்குழுக்களுக்குக் கொடுத்தது மட்டுமல்லாமல் ஒரு நாடகக்குழுவில் பங்கேற்று நடித்துக் கொண்டிருந்த நேரத்தில் புதுவையில் நடைபெற்ற ஒரு பெரிய கலவரத்தில் அவரையும் மற்றவர்கள் அடித்துப் போட்டு, இவர் செத்து விட்டார் என்ற எண்ணத்திலே பாதையோரத்தில் கிடைத்தி விட்டுச்சென்று வருடம் 22 ஆகிறது. அதைவிடப் பெரிய தாக்குதல் இனி யாரும் நடத்த முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால் தாக்குதல் நடந்த இடம் புதுச்சேரி. "புதுச்சேரித்" தாக்குதலே அவ்வளவுதான். புதுச்சேரியை மற்ற இடங்களுக்கு வரவழைத்துக் கொண்டு தாக்குபவர்களின் தாக்குதல் அதைவிடப் பயங்கரமானதாக இருக்கமுடியாது. ஆகையினால், அவைகளிலே எல்லாம் தேறிப் பிழைத்து இந்த நிலைக்கு வந்தவர்தான் கருணாநிதி என்பதை அவர் பிறந்த நாளில் எண்ணிக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். மிகுந்த பெருமையடைகிறோம்.

இந்தக் கழகத்தில்—ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரசிலே இல்லாத அளவுக்கு ஒருசேரத் திறமைகளை பெற்றவர்கள் நிரம்ப இங்கே இருக்கிறார்கள். மற்ற கட்சி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவரை வைத்திருப்பார்கள். நம்முடைய கழகத்திலே அப்படி அல்ல. எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமானால் அதை நான் செய்யவேண்டும் என்ற நிலையிருந்தாலும் எனக்குப் பதிலாக அந்தக் காரியங்களை ஏற்று நடத்துவதற்குரிய அறிவாற்றலைக் கருணாநிதியைப் போன்ற பலர் பெற்று வந்திருப்பதால்தான் இந்தக் கழகம் இன்றைய தினம் கூட்டு முயற்சியின் நல்ல வடிவமாக தமிழகத்திலே விளங்கிக் கொண்டிருக்கிறது.

என்னை முழுவதும் அறிந்தவர்கள்தான் கழகத்திலே இருக்கிறார்கள் அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத்தக்கவர்களிலே கருணாநிதிக்கு மிகச் சிறந்த இடமுண்டு.

நான் கவலையோடு இருக்கிறேன் என்றால் முதன் முதல் கண்டு பிடிக்கக்கூடியது கருணாநிதிதான். கோபமாக இருக்கிறேன் என்றால் முதல் முதல் கண்டு பிடிக்கக்கூடியது கருணாநிதிதான். நான் கோபமாக இருப்பது தெரியாமல் என்னிடத்தில் ஏதாவது பேசி நான் கோபமாக நாலுவார்த்தை சொன்ன பிறகு, "அண்ணா கோபமாக இருக்கிறார்" என்று சொல்பவர் நம்முடைய நாவலர்.

கலைக்கு இருக்கும் ஒரு விசேடமே அது. கவலைப் பட்டு நடிக்கிறானென்றால் மற்றவர்களும் அதை உணர்ந்து அல்லது அந்தக் கணமே அறிந்து மற்றவர்களைக் கவலைப்பட வைப்பதுதான் கலைஞனுடைய திறமை. அதைப்போல என்னுடைய கோபதாபங்களை என்னுடைய கவலைகளை உடனுக்குடன நொடிப்பொழுதில் அறிந்தே அதை மாற்றவேண்டும் என்ற அக்கறையோடு நல்ல முறையில் துணைபுரிவதில் கருணாநிதிக்கு ஈடு கருணாநிதிதான்?

அவர் மூலமாக நானும் நாடும் இன்னும் நிரம்ப எதிர் பார்க்கிறோம். இப்பொழுது செய்கின்ற காரியங்களைப்போல் பல மடங்கு அதிகமான காரியங்கள் அவருடைய திறமையின் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியதிருக்கிறது. ஆகையினால், அவரைப் பற்றி எடுத்துச் சொல்லவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிற எண்ணங்களில் பலவற்றைப் பின்னுக்குத் தள்ளி சிலவற்றை மட்டும் "இந்த வேளைக்கு இது போதும்" என்று எடுத்துக் கொடுக்கிற அளவுக்குச் சொல்கிறேன். ஓர் உண்மையான அண்ணன் தன்னுடைய தம்பியிடத்தில் அப்படித்தான் நடந்து கொள்ளவேண்டும். பெட்டியிலுள்ளது அனைத்தையும் அப்படியே தம்பியினிடத்தில் ஓர் அண்ணன் எடுத்துக் கொடுத்து விடமாட்டான். அதற்குப் பிறகு அதைக் காலி பெட்டியாக வைத்துக் கொண்டிருக்கவும் மாட்டான். கொடுத்து விட்ட பிறகு "இவ்வளவுதானா பெட்டியிலே இருந்தது"? என்று தம்பி எண்ணி விடுவானால் அந்த அண்ணனுக்கும், குடும்பத்திலே மதிப்பிருக்காது. பெட்டியைத் திறந்து கொஞ்சம் எடுத்துக்கொடுத்து மிச்சம் நிறைய இருக்கிறது என்று பூட்டி வைத்தால்தான் அண்ணனுக்கு மதிப்பு.

இதைப்போல்தான் என்னுடைய பாராட்டை ஒவ்வொரு தம்பியும் பெறவேண்டும், கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் பெறவேண்டும். அந்தத் தோழர்கள் என்பதிலே தோழியர்களும் உள்ளடக்கம். [சொற்பொழிவு]

அண்ணாவுக்கு வாழ்த்து

கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் *(10—8—48 முரசொலி வார இதழ்)*

"போர்! இளம் இதயங்களின் பசிபோக்க நல்ல உணவு. அறப் போரா! தயார். இரத்தப் போரா? அதற்குத்தயார்.

சதைக் குன்றுகள், எலும்பு மேடுகள் குவிக்க எண்ணமா? எதற்கும் தயார். இந்த உறுதி மொழியை அவிநாசியாருக்கு அறிவித்து விடுங்கள். அந்த வீரக் குரலோடு எங்கள் உள்ளத் துடிப்புகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்"

இந்த ஓலைகளைத் தலைவருக்கு அனுப்பிவிட்டு ஒன்று, இரண்டு என்று நாள் எண்ணி வந்தவர்கள் ஆகஸ்டு 2ந் தேதி காலை 9 மணி முதல் 'ஒன்று, இரண்டு' என நிமிஷங்களைக் கணக்கிட்டனர். ஆகஸ்டு 10! என்றார் தலைவர். ஆம். அன்றுதான் அறப்போர் ஆரம்பம் என்று எதிரொலித்தது தமிழகம். ஆகஸ்டு 10! ரத்தினத்தால் இழைக்கப் படும் எழுத்துக்களோ! அன்றி ரத்தத்தால் தீட்டப் படும் எழுத்துக்களோ? தமிழக வரலாற்றில் முக்கியமாக அங்கம் வகிக்கப்போகும் அந்தநாளை வீரர்கள் வெற்றித் திருநாள் என்கின்றனர்.

போரிலேயே பழகி-போர்க்கள நிகழ்ச்சிகளையே காலக்ஷேபமாக்கிக் கொண்டு ஆட்சி பீடத்திலமர்ந்து—இப்போதும் அந்தப் போருக்கே ஆசைப்படுகிற திராவிடர் அமைச்சர் குழுவை—அகிம்சா மூர்த்திகளை—போர் என்றதும் புன்னகை புரியும் திராவிடர் காளையர் களத்திலே சந்திக்கும் நாள் அது.

பல சொல்லி—சில செய்யவும் அருகதையற்று, செய்த சிலவும் சீர்கேடுற்று, செய்யத்தகாதன பல செய்து சிம்மாசனமும் செங்கோலும் நிலையாமென எண்ணி ரத்தபாசத்தையும் நிலைத்துப் பார்க்க நேரமற்றவராய்—இந்துவின் சுட்டுவிரல் ஆட்டம், மித்திரனின் மிரட்டல் பார்வை—இவைகளில் நடுக்க நர்த்தன மாடிடும் பயங்கொள்ளிகளாய்—ஆஞ்சநேயராய் வீபீஷணராய் — அஸ்தமனத்தை உதயமெனக் கூறிடும் குருட்டுக் கண் படைத்தோராய் அரசாங்கம் நடத்த வந்தோரை—வலுப் போருக்கு 'வா தமிழா!' என்று பேரிகை கொட்டிய வரை, வந்தோம் வந்தோமென கட்சையை வரிந்து கட்டிக்கொண்டு சிங்கத்தமிழர் படை எதிர்க்கத் துணிந்த நாள்.

ஆகஸ்டு 10! தலைவரின் இதயத்திலிருந்து அவசரமாகக் குதித்த வார்த்தையா அது? 'இந்தி கட்டாயம்' என்று அவிநாசியார் உளறிடும் விதத்தில் உதிர்ந்த மொழியா? அறப்போர் என்றால் அஃதோர் வேடிக்கை விளையாட்டு என்று கருதுகிற பிள்ளைக்குணம் படைத்தோர் பிதற்றிய சொல்லா?

ஜூலை 14...பிரான்சு நாட்டு மக்களின் பெருமூச்சோடு கலந்துவந்த அந்த எழுத்துக்களில் ஏறியிருந்த கொதிப்பைவிட அதிகக் கொதிப்பு பெரியாரின் ஆகஸ்டு 10ல் இருந்தது. இருந்திருக்கத்தான் வேண்டும்.

அறிவு பரப்பும் நாடகமா!

அதை நடிக்காதே!

பகுத்தறிவு பரப்பும் நூலா?

அதைப் படிக்காதே!

மானத்தை நினைவூட்டும் சொற்பொழிவா?

அதைப் பேசாதே.

பார் பார் பாதுகாப்புச் சட்டம்.

அதோ பார் அவசரசட்டம். பிரஜா உரிமைக்குப் போராடியவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததும் அதிகார போதையில் அள்ளி வீசிய அக்கினிப் பந்தங்கள் இவை.

'தலைவரே! தாங்கமுடியவில்லையே. தணலாகுதே எங்கள் நெஞ்சம். தலையுடைத்த வீரர்கள்—இந்தியத் தரணியாளும் சூரர்கள் என்ற பரணி பாடிக் கொண்டே தகாத செயல்களால் தன் மானத்தை சூறையாடுகிறார்களே; படமுடியாதினித் துயரம், பட்டதெல்லாம் போதும். இன்னும் அமைதி என்கிறீர்களா? இன்னும் பொறுமை என்கிறீர்களா? இனியும் பொறுப்பது நம் வம்சத்தின் வீரத்திற்கு அழகல்லவே.

ஆள்வது திராவிட அமைச்சர்கள் என்கிறீர்களே! திராவிடராயிருந்தால் என்ன...விபீஷணன் காலில் இராவணன் விழுவதா! அக்கிரீவன் கொடுமையை வாலி பொறுப்பதா? முடியாது. முடியாது. இனிப் பொறுக்க முடியாது.

நமது வாழ்விலேயே—நமது மானத்திலேயே—நமது கலாசாரத்திலேயே கைவைக்க ஆரம்பித்து விட்டார்கள். நம்மை ஊமையாக்க திட்டம் தீட்டி விட்டார்கள். திராவிடத்து சந்ததிகளை பேடிகளாக—பேமானிகளாக-வெளியுலகம் தெரியாத தேரைக் குஞ்சுகளாக ஆக்க வடவரிடம் ஒப்பந்தம் செய்து பதவியை வஞ்சமாகப் பெற்று விட்டார்கள்.

உலகத்தோடு பிறந்த தமிழுக்கே உலைவைக்கத் தைரியம் கொண்டு விட்டார்கள். வள்ளுவரின் குறளிலே—இளங்கோவின் சிலம்பிலே—அகத்திலே—புறத்திலே அழகு நடனம் புரியும் அன்புத் தமிழை அழிக்க சதிக்கூடம் அமைத்து விட்டார்கள். இனியும் கோழைகளாய் இருக்க முடியாது.

தலைவரே! எங்கே கட்டளை!...குறித்து விடுங்கள் களம் புகும்நாள்!......

அவிநாசியார் மேல் அனுதாபமா! பாவம் பிரமச்சாரி என்ற பரிதாபமா! ஆண்களோடு பழகியதால் பெண்களின் மென்மை தெரியாதவர்... ஆகவே தமிழின் மென்மை புரியாது; இந்தியெனும் முள்ளை அணைத்துக் கொள்கிறார் என்று ஆறுதல் பேசுகிறீர்களா?

இல்லை...இல்லை......அவிநாசியார், தெரிந்தே தமிழை — தமிழரை — தமிழர் கலாச்சாரத்தை அழிக்கப் புறப்பட்டிருக்கிறார். ஆம்...கண்ணைத் திறந்து கொண்டுதான் கள்ளிக் காட்டில் கால் வைக்கிறார்.

இனியும் பொறுமை வேண்டாம். தமிழுக்கு விளக்கம் கூறி தமிழ் மக்களை பட்டாளத்தில் சேர்க்கும் பிரச்சாரமும் தேவையில்லை.

இந்திக்குப் பொதுமொழியாகும் தகுதி சிறிதுமில்லை. இந்தியிலே இலக்கியமில்லை. நல்ல பண்பில்லை, அதிகப்படியான மக்கள் பேசுகிறார் என்ற கூற்றுக்கு ஆதாரமுமில்லை, என்ற வியாக்யானம் செய்து கொண்டிருக்கத் தேவை கிடையாது. நாளுமில்லை. இஷ்டபாடமாகவும் இந்தி இந்நாட்டு இளம் மாணவர் தோளில் ஏறக்கூடாது. இதை உடனே போர்ப் பாடலாக ஆக்குங்கள். பிரஜா உரிமையைத் தடுக்கும் சர்க்காரின் போக்கிலே நமது எதிர்ப்பை மோத விடுங்கள். "பலமிருக்கிறதா நமக்கு?" என்ற யோசனை வேண்டாம். இதோ பாருங்கள். ஒதுங்கியிருந்தவர் உங்கள் உத்திரவை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

அதோ **சிவஞான கிராமணி**யாரின் சிங்கக் குரல்! கதராடையிலே அவர் நடத்தும் கர்ச்சனையைக் கேளுங்கள். தொழிலாளர்த் தலைவர் தமிழ்த் **தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனா**ரின் புயல் நடைப் பேச்சைப் பாருங்கள்.

தமிழ்க்கடல் **மறைமலையடிகளாரின்** சொல்லிலே வீரம் சொட்டுவதை கவனியுங்கள்.

நாவலர் **சோமசுந்தரபாரதியார்** ஆரிய இந்திக்கு அனுப்பியுள்ள சாவோலையைப் படியுங்கள்.

இதோ ரத்தத்தால் தீட்டப்பட்ட ஆறுயிரம் கடிதங்களும் "அறப்போர்? எப்போது ஆரம்பம்?" என்ற கேள்விகளைக் கேட்பது உங்கள் காதில் விழவில்லையா? இன்னுமா மௌனம்? பெரியாரே! பெருந்தலைவ! இந்த மௌனம் எங்களைக் கொல்லுகிறதே! எங்கள் தினவெடுக்கும் தோள்களில்—அதிர்ந்து கொண்டுள்ள நரம்புகளில்—சூடேற்றிச் சுழன்று கொண்டிருக்கும் ரத்தத்தில்—வாழ்வு அல்லது சாவு என்ற உறுதி கீதம் பாடும் உள்ளத்தில் தங்களுக்கு நம்பிக்கையில்லையா?

தங்களுக்குப் பின்னல் அணிவகுத்து நிற்கும் தமிழர் வெட்டிவா என்றுரைத்தால் கட்டிவரும் வீரராயிற்றே. வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ் செய்கின்ற மூச்சு எங்கள் தமிழ் மூச்சாயிற்றே. பொங்குதமிழர்க்கின்னல் விளைத்த பின்னும் பொறுமையெனப் பேசலாமா?

கெஞ்சிக் கேட்கிறோம்; தாய்மேல்—தந்தைமேல்—தமிழ்மேல்—தன்மானத்தின்மேல் ஆணையிட்டுக் கேட்கிறோம்; விடைதருக. வீரர்கள் நாங்கள். வீரம் விழலுக்கிரைத்த நீராகலாகாது. வேதனையைப் போக்க வழி சொல்லுங்கள். ஒரே வார்த்தை, இரண்டே எழுத்துக்கள், போர்! இதைத்தான் ஆவலோடு—இருதயப் பசியோடு எதிர்பார்த்து நிற்கிறோம்."

கண்களிலே கனல் பறக்க—முகத்திலே சிகப்பு நிறம் பரவி நிற்க—வார்த்தையிலே சூறுவளி வேகத்தைச் சேர்த்து திராவிட மாவீரர், புரட்சிப் பண்பாடி போருக்கு உத்திரவுகேட்ட பிறகு, திராவிடத்தின் ஏகத்தலைவன்—மாத்தமிழன்—மறவேந்தன்—லட்சியம் தவிர வேறென்றறியா கர்மவீரன்—தியாகத்தை பதவி வேட்டைக்குப் பயன்படுத்தாத பொதுநலப் பூமான்—புத்துலகச் சிற்பி—பெரியார் ராமசாமி புண்பட்ட உள்ளத்தை, புரட்சி உள்ளமாக மாற்றிக் கூறியதுதான் அந்தப் போர்க்களம் புகுநாள், ஆகஸ்டு 10!

ஆகஸ்டு 10-ல் சென்னை அறப்போர்க்களமாகப் போகிறது. படையின் முதல் தலைவராக அணி வகுக்கப் போகிறவர் அறிஞர் ஏறு-ஆற்றல் மன்னன்—தளபதி அண்ணு இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே தன்னை மாஜி தளகர்த்தன் என அறிமுகப்படுத்திக் கொண்டார். இல்லை, மாஜி தளகர்த்தரில்லை. அன்றும், இன்றும், என்றும் திராவிடரின் தளகர்த்தர்தான் என்பதை ஆகஸ்டு 2-தேதி கூறிற்று. அதற்கு முன்பே நாம் கூறினோம்.

பெரியார்—அண்ணு! இடையே அகழ் வெட்டாதீர்கள். பாலம் அமையுங்கள் என்று பலப்பல வேண்டினோம். நாம் செய்யாத வேலையை அவிநாசியார் செய்துவிட்டார். இதோ பெரியார்! அவர் பின்னே அண்ணு! அடுத்த வரிசையிலே நாம். நமக்காக அரசாங்க சிறைச்சாலையும், சவக்குழியும் வாய்பிளந்து நிற்கின்றன. ஆம் நம்மை இரையாக்க! சிறைச்சாலையும் சவக்குழியும் அஜீரண நோய்கனாகும் வரையில் நமது படை வரிசை வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். முதலிலே அண்ணு செல்கிறார். நமது தளபதி செல்கிறார். நமது தங்கம் செல்கிறது. நமக்கெல்லாம் ஒரே ஒரு அண்ணு—அவர் செல்கிறார். நமக்காக—நம் நாட்டுக்காக—நஞ்சுடன் போராடச் செல்கிறது அடலேறு, ஐயகோ! அடக்குமுறை அவரை என்னபாடு படுத்துமோ!

"எழுத்தின் வேந்தரே! இளந்தலைவா! போர் வந்தால் பட்டாளத்தார் பட்டியலில் அண்ணுவின் பெயர்தான் முதலில் எழுதப்படுமென திருவாரூரில் முழக்கமிட்டீர். மாதமிரண்டு மறையவில்லை. மறக்குல மகிபா! இதோ களத்திலே காணுகிறோம்"

"வாழ்வா? சாவா? ஒருகை பார்த்துவிடுகிறேன். வாகைமாலை சூடிடுவோம் வாரீர்" என தமிழகத் தாரை அழைக்கும் தோரணையே எங்கள் தோள்களைப் பிடித்து குலுக்குகிறதே.

மாநாட்டிலே—ஆவேசப் பேச்சினிடையிலே போர்! போர்!! போர்!!! என்றீர், போர் வந்து விட்டது. புறப்பட்டு விட்டீர்.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" இந்தப் பாடலை ஏட்டிலே தீட்டித் தீட்டிக் காட்டினீர். இன்று எழுத்து செயல் பெற்று எழுந்து விட்டது. அந்த உணர்ச்சியின் வேகத்தை அண்ணுவின் வடிவத்தில் காண்கிறோம். தமிழர் வாழ்வில் விஷங்கலப் போரின் எண்ணத்தில் ஈட்டி எறியப் போகிறீர். இதோ நாங்களும் வந்துவிட்டோம்"

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவே நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை . . .
ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.
பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் :: சென்னை-8

எனக்கூறி, நிமிர்ந்த நெஞ்சும், நெருப்புக் கண்களும் கொண்டோர் சீறிடும் நாகங்களென சேர்ந்து வருகின்றனர்.

போராட்ட அனுபவமும், போர் முறையுந் தெரிந்த பெருங் கிழவர் பெரியார் ஈ. வே. ரா. வின் பெருவாழ்த்து பெற்று அண்ணு தளபதி என்ற விருதுடன் வைர வாளேந்தி விட்டார்.

ஆகஸ்டு 10-ல் அவர் களம் புகுவிழா! அதற்குள் அவருக்கும் பெரியாருக்கும் அரசாங்கம், சிறை புகுவிழா நடத்தி சிரித்து மகிழலாம்.

அதற்குள் நாமும் அண்ணுவை வாழ்த்தி வழியனுப்ப கடமைப் பட்டிருக்கிறோம். அண்ணு வின் வாழ்த்து பெற்றவர் நாம். நாம் வாழ்த்து கிறோம் அவரை!

"அண்ணு! அறிஞரே! தளபதியே! அடக்கு முறையை எதிர்த்துச் செல்கிறீர். இன்னும் மனம் விட்டுச் சொல்லவேண்டுமானல் சாவுமுனை நோக்கிச் செல்கிறீர். ஆ! எழுதவே கை நடுங்குகிறது. உள்ளம் குலுங்குகிறது. கண்ணீர் பெருகுகிறது. வெற்றியுடன் திரும்பிவருமாறு வாழ்த்துகிறோம். வாகைமாலை சூடி வருமாறு வாழ்த்துகிறோம். ஆயிரம்முறை வணங்கி அனுப்புகிறோம்; அண்ணு திரும்பி வருக.

கடைசியாக அமைச்சர்களுக்கு ஒன்று! ஆகஸ்டு 15 சுதந்திர நாள். சென்ற ஆண்டு ஆகஸ்டு 15 ஐ ஆதரித்து—அது விடுதலை விழா என்று கூறி—வெள்ளையன் வெளியேறினன் என மகிழ்ந்துரைத்த எங்கள் அண்ணுவை இந்த ஆகஸ்டில் களத்தில் சந்திக்கிறீர்கள். மறந்துவிட வேண்டாம். ஆகஸ்டு 15 துக்கநாள். அது திராவிடர் நலனுக்கு நாசம் தரும் என, சென்ற ஆண்டு செப்பிய எங்கள் தலைவர் பெரியார் ராமசாமியை (அவர் கூறியது உண்மைதான். அதன் அடையாளமே இந்த இந்தி என்பது போல்) போர்முனையில் இந்த ஆகஸ்டில் இழுத்துவந்து விட்டீர்கள். அதையும் மறந்துவிட வேண்டாம்.

சர்த்தார் வேதரத்தினங்களின் சல்லடமும், உங்கள் பயமுறுத்தல்களும், ஆரிய தினசரிகளின் பித்தலாட்டமும் தமிழரின் பெரும்படையின் முன்னே தமிழரின் இன உணர்ச்சியின் முன்னே செல்லுபடியாகாது, செல்லுபடியாகாது.

"சாகத் துணிந்தவனுக் சமுத்திரம் முழங்கால் அளவு" இந்தப் பழமொழியை நெஞ்சிலே நிறுத்திக் கொண்டு அறப்போர் ஆரம்பமாகி விட்டது.

நியாயமும் நேர்மையும், முடிவை நிர்ணயிக்கத் தான் போகின்றன.

★



அண்ணா சகாப்தம்!

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

தமிழகம் தாழ்ந்து வீழ்ந்து கிடந்த நேரத்தில்தான் பெரியார் தோன்றினார். அவர் செய்தது நினைவுத் திருப்பங்கள்.

அந்தத் திருப்பங்களுக்கு உயிரூட்டி அழகு கூட்டி மக்களிடையே மவுசு பெற வைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்களாகும்!

அண்ணா அவர்களிடம் நிறைந்திருந்த குணம் பொறுமையும்; ஒருவரைத் தெரிந்தெடுக்கும் திறமும் ஆகும்.

தாம்கொண்ட கொள்கை குறிக்கோளிலிருந்து விலகாமையும்; தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும் அண்ணா அவர்கள் காட்டிய தீவிரம் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள அனைவரும் நினைவு கூர்ந்து அதன்படி நடந்தாகத் தக்கதாகும்.

இயக்கத்தின் கொள்கை அனைவருக்கும் ஆம் இயக்கத்தவர்களுக்குப் பொதுவானது உரிமையுடையதுதான் ஆயினும் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடந்திட வேண்டும் என்பதை செயலில் காட்டிய தளபதி அண்ணா அவர்கள்.

கொள்கைக்குச் சோதனை வரும்போது ஒதுங்கியிருந்ததில்லை. முதல் வரிசையில் முதலாக நிற்பது அண்ணாவாக இருக்கும்.

இதைப்போலவே இயக்கத்தில் உள்ள ஒவ்வொருவரையும் 'அளந்து' வைத்திருக்கும் ஆற்றலும் நிறைந்தவர். ஒருநாள் ஏறத்தாழ பத்தாண்டுகளுக்குமுன்; திருச்சி மாவடத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார், அண்ணா அவர்கள். அண்ணாவுடன் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, நமது இராசகோபால் ஆகியோர்களும் இருந்தனர். திருச்சி மாவட்டத்தில் இயக்கத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படுமளவு நடந்து கொண்டிருந்த ஒரு தோழர் பெயரைக் கூறி, "அவர்மீது நடவடிக்கை எடுங்கள் அண்ணா" என்று கழகத் தோழர்கள் கூறினார்களாம். அதற்கு அண்ணா அவர்கள், 'வேண்டுமானால் நமது இளமுருகு பொற்செல்வி மீது நடவடிக்கை எடுக்கிறேன். உங்கள் மாவட்டத்தில் நடவடிக்கை வேண்டும் என்று நீங்கள் விரும்புவதால்" என்று பதில் கூறினாராம் அண்ணா. உடனே தோழர்கள் பதறிப்போய், "என்ன அண்ணா! இளமுருகு அண்ணன் மீது நடவடிக்கையா? அவர் தவறோ, பிழையோ செய்வது இல்லையே! அதுமட்டுமல்ல கழகத் தோழர்களுக்கு ஆதரவு தருபவர். அதுமட்டுமல்ல, அந்தப் பக்கத்தில் கழக வளர்ச்சிக்கு அவர்தானே காரணமாயுமிருக்கிறார் அவர்மீது நடவடிக்கையா? என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள்.

அண்ணா அவர்களோ சிரித்தபடி, "அதனால்தான் அவர்மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்றேன். நான் நடவடிக்கை எடுத்தாலும், "அண்ணா வாழ்க!" என்று கூறிக்கொண்டு நம்மவராகவேயிருப்பாரே தவிர நிலையில் மாறமாட்டார். நீங்கள் குறிப்பிட்டவர்மீது நடவடிக்கை எடுத்தால்- அடுத்த மேடையில் ஏறுவார் ஏதேதோ பிதற்றுவார் எனவே, அவரைப் பொருட்படுத்தாமல் அலட்சியமாக விட்டு விடுங்கள், அதுபோதும்" என்று கூறினாராம்.

இந்தச் செய்தியைக் கழகத் தோழர்கள் என்னிடம் கூறி, "அண்ணா உங்கள்மீது எவ்வளவு பற்றும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள்" என்று மகிழ்ந்தார்கள்.

அத்தகு தலைவனின் பாசறையில் நான் ஒரு தொண்டன். இது எனது வாழ்வின் பெரும் பாக்யம்!

அரசியலில் தலைவனுடைய நம்பிக்கையை உள்ளுணர்வுடன் ஒன்றிய தன்மையைப் பெறுவது என்பதும்; அப்படி அன்பு ஆர்வங்காட்டுவது என்பதும் மிகமிக அரிய நிலையாகும். ஆனால் அரசியலில் குடும்ப பாசத்தைக் கொட்டி வளர்த்த அண்ணாவிடம் இந்த உணர்வுகள் அதிகம். ஒவ்வொருவரைப் பற்றியும் தெளிவாக அறிந்து வைத்திருப்பார்கள்.

ஒரு ஊருக்குக் கூட்டத்துக்கு அண்ணா [illegible] அந்த ஊரில் உள்ள [illegible] முகத்தவர் [illegible]

கலைஞரைப் பற்றி... பேரறிஞர் அண்ணா

"......கரும்பைக் கத்தியால் வெட்டாமல் கடித்துச் சாப்பிடும்போது சுவையுள்ள சாறு வரும்; அதோடு கரும்பு குத்துவதால் ஈறில் பட்டு இரத்தமும் வரும். இரத்தத்தைப் பார்த்ததும் "ஐயோ ரத்தம்!" என்று பயப்பட்டாலும் கரும்பின் சுவையுள்ள சாற்றைச் சுவைக்கும்போது அது தெரிவதில்லை. அதுபோல தம்பி கருணாநிதியைச் சிறைச் சாலையில் அடைத்தபோது கரும்பைத் தின்றபோது வந்த ரத்தத்தைக் கண்டு "ஆ! ரத்தம்" என்று கூறியதுபோல "தம்பியை அடைத்துவிட்டார்களே!" என்று எண்ணினேன். ஆனால் கரும்பின் சுவையை அனுபவித்ததுபோல் "பாதுகாப்புச் சட்டத்தைத் தானே போட்டாய்! வேறு எந்தச் சட்டமும் பலிக்கவில்லை என்று கண்டு கொண்டாயா? -சபாஷ்!-" என்று ஆட்சியாளரைக் கேட்கும் மகிழ்ச்சி உணர்வுதான் எனக்கு வந்தது."

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்!
காசுள்ளபோதே சேர்த்துக்கொள்!!

"எச்செலவும் வருவாய்க்குள் பண்ணவேண்டும்,
எதிர்காலத் தேவைகளை என்ன வேண்டும்,
மிச்சமென்று சிறிதேனும் சேர்த்து வைத்தால்-
மீறி ஒரு துன்பம்வரின் தீர்த்து வைக்கும்!" —நாமக்கல் கவிஞர்.

எனவே,

சம்பாதித்துக் கொண்டிருக்கும் பொழுதே தொடர்வைப்புத் தொகைத் திட்டத்தில் (ரிகரிங் டெபாசிட் திட்டம்) அல்லது வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் (க்யுமுலேடிவ் டைம் டெபாசிட் திட்டம்) ஒரு கணக்கைத் துவக்கி மாதம் 5 அல்லது 10 ரூபாய் வீதம் கட்டிட முன் வாருங்கள். இத்திட்டங்களின்கீழ் செலுத்தும் தொகை பின்கண்டவாறு பெருகும்!

மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
தொடர்வைப்புத் தொகை திட்டம்		
ரூபாய் 5.	ரூபாய் 360	——
ரூபாய் 10.	ரூபாய் 720	——
வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்:		
ரூபாய் 5.	——	ரூபாய் 785
ரூபாய் 10	——	ரூபாய் 1,570

தொடர்வைப்புத் தொகைத் திட்டத்தின்கீழ் 1—7—72க்குப் பிறகு கணக்குத் துவங்குகின்றவர்கள் எதிர்பாராதவிதமாக இறந்து விட்டால், 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களுடைய வாரிசுதார்களுக்குக் கிடைக்கும். சிறு சேமிப்பு செய்பவர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது.

★ இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்! ★

— சிறுசேமிப்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் உண்டு அவருக்கு. உள்ளூரார்கூட அவ்வளவு துல்லிதமாக அறிந்திருப்பார்களா என்பது ஐயப்பாடே! தனது குறும்புச் சிரிப்புடன் "எங்கேப்பா 'மேடை மோகினி' யைக் காணோம்?" என்பார், "ஆமா 'அந்தத் திடீர் காதலர் மறைந்து விட்டாரா?" என்ற கேள்வியை வைப்பார். இந்த பெயரில் அவர் குறிப்பிடுவது கழகப் பணிகளில் ஈடுபாடு கொள்ளாது அண்ணா வந்ததும் மேடையில் குறுக்கும் நெடுக்குமாக திரியும் நடிப்புத் தொண்டனைக் குறிப்பது. மற்றது கழக வளர்ச்சிக்கு ஊறு செய்து கொண்டிருக்கும் சிலர் அண்ணா வந்தால் மிகப் பாசங் கொண்டவர்கள் போல் முன்வந்து நிற்பார்கள் அவர்களைக் குறிப்பதாகும்.

அத்தகைய தீர்க்க தரிசனம் நிறைந்த அண்ணா அவர்கள் வரலாற்றுச் சிறப்புள்ள தமிழகத்துக்கு மறுபடியும் பொலிவையும் வலிவையும் தந்திருக்கிறார்கள். இது அண்ணாவால்தான் முடியும்? எனவே இது **"அண்ணா சகாப்தமாகும்."**

அண்ணா சகாப்தம் தமிழர்களுக்கு வாழ்வளித்தாக வேண்டிய சகாப்தம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வீழ்ந்து கிடந்த சமுதாயம் தலைநிமிர்கிறது. முழுமை பெற சில அல்ல; பல ஆண்டுகளாகும், ஆம் —தொடர்ந்து இதே சுறுசுறுப்பில் பணியாற்றி வந்தால். இடையிலே தொய்வோ, கசிவோ ஏற்பட்டால் தமிழர் வாழ்வு மறுபடியும் ஆயிரம் ஆண்டுகள் தள்ளிப்போட வேண்டிய சமாச்சாரமாகிவிடும். ஆயிரம் ஆண்டுகள் மட்டுமல்ல; ஒரு அண்ணா தோன்றவும் வேண்டும்.

அண்ணா தந்துள்ள அட்சய பாத்திரமாக 'கழகம்' நம்மிடம் இருக்கிறது நாமனைவரும் ஒருமுகமாக நின்று கழகத்தின் வலிவைப் பெருக்கி வாழ்வை தமிழர்களுக்குத் தரப் பாடுபடுவோம் என்ற உறுதி அவசியமாகும்.

கழகம்-நடைபோட, தலைவர் வேண்டும். அண்ணாவின் உறுதியும், உள்ளமும் கொண்ட **கலைஞர் தலைமையில்** இன்று போல் **என்றும்** செயல்பட கலைஞரின் பொன்னான பிறந்த நாளன்று நமது குரலை;- **ஒருமித்த குரலை கலைஞருக்குத் தெரிவிப்பதே நாம் கலைஞருக்கு வழங்கும் பிறந்த நாள் பரிசாகும்,** "*கலைஞர் அவர்களே!* **தலைமை எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடந்திட நாங்கள் உறுதி தருகிறோம். தமிழ்ச் சமுதாயம் உடை, உணவு, உறைவிடம் ஆகியவற்றில் நிறைவுபெறும் அண்ணா சகாப்தத்தை ஆக்கிடும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்**" என்று கூறி வாழ்த்துவோம்.

★

கலைஞரின் சிறுகதை : | சபலம் | திறனாய்வுக் கட்டுரை.

சபலம்

மு.பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.

இன்றை இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்ற இலக்கிய வடிவமாக அமைந்து, ஈடு இணையற்ற முறையில் வளர்ச்சிபெற்று வருவது சிறுகதைத் துறையாகும். உரைநடை வளர்ச்சியே சிறுகதை வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாகத் திகழ்கிறது.

வேகமாகப் படித்து முடிக்கக் கூடிய அளவுக்குச் சிறுகதையின் வடிவம் அமைந்துள்ளதால், அதன் வளர்ச்சியும் வேகமாகவே உள்ளது. அறிவியல் உலகின் விரைவுக்கு ஏற்ப, சிறிய அளவில் கதைப் போக்கு இருப்பதால், மக்கள் மத்தியில் சிறுகதைத் துறை மிக்க செல்வாக்குப் பெற்றுள்ளது.

அமெரிக்க எழுத்தாளர் எட்கார் ஆலன்போ என்பாரின் புதியபடைப்பே இன்றைய சிறுகதை வடிவமாகும். ஓ. ஹென்றி, மாப்பசான், செகோ போன்றோர், அச்சிறுகதைச் செல்வியை சீராட்டி வளர்த்த செம்மல்கள் ஆவர். ஒரு நூற்றாண்டுக் காலமே யாயினும், உலகத்தார் உள்ளத்தைத் தொடும் ஒப்பரிய வடிவத்தோடு உன்னத வளர்ச்சி பெற்றுத் திகழ்வது, சிறுகதைத் துறையாகும்.

தமிழ் இலக்கிய வானிலும் தலைசிறந்த சிறுகதைகள் ஒளிவிடத் தொடங்கின; ஒளிவிட்டுக்கொண்டிருக்கின்றன. கலை கலைக்காகவே என்ற எண்ணத்தோடு கதை எழுதுவோர் உளர். கலை, வாழ்க்கைக்காகவேஎன்ற கருத்தோடு கதைவடிக்க முனைந்து பெருவெற்றி பெற்றோரும் உளர். அரிய கருத்துக்களை உரியமுறையில் புகுத்தி, உயிரோட்டம் மிக்க கதைகளை வடித்து ஓங்குபுகழ் பெற்றவர் **பேரறிஞர் அண்ணா** ஆவார். அவர் வழி நின்று, உள்ளத்தைத்தொடும் உணர்ச்சிமிக்க கதைகளைப் படைத்து, புகழ் ஏணியின் உச்சியில் பொலிவோடு காணப்படுபவர் **டாக்டர் கலைஞர்** ஆவார்.

பேரறிஞர் அண்ணாவைப் போலவே, டாக்டர் கலைஞர் அவர்களும், பல்துறை விற்பன்னராக விளங்கி வருபவர். ஆம்! கலைஞர், நாடாளும் திறன் பெற்றவர் மட்டுமல்லர்; நாடக ஆசிரியரும் ஆவார். இதழாசிரியராக இருந்தவர் மட்டுமல்லர்; இதயங் கவரும் உணர்ச்சிக் கவிஞராகவும் இலங்கு பவர். நாவன்மை படைத்தவர் மட்டுமல்லர்; நாவலாசிரியரும் ஆவார். இத்தனை திறன்களோடு, முத்தனைய சிறுகதைகளை வடிக்கும் முத்தமிழ்ச் சிங்கமாகவும் அவர் திகழ்கிறார்.

"அவர் (கலைஞர்) தந்த எழுத்தோவியங்கள் நாட்டு மக்களுக்கு நலனும், குறைமதியாளர்களுக்கு நடுக்கமும், நச்சு நினைப்பினருக்கு ஆத்திரமும் ஊட்டடத்தான் செய்தது... ... ... **கருணாநிதியின்** திறமை, வளர்ந்துவரும் மறுமலர்ச்சியின் நன்மலர்!" என்று **பேரறிஞர் அண்ணா** அவர்களே, வியந்து போற்றுகின்றார் எனில் கலைஞரின் எழுத்தாற்றலைப் புலப்படுத்த வேறு எடுத்துக் காட்டும் வேண்டுமோ?

கலைஞர் வடித்த சிறுகதைகள் பலவாகும். அவற்றில் சிறியதோர் அளவில் திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ஒரு கதைதான் 'சபலம்'. படிப்போர் நெஞ்சத்தில் ஆர்வத்தை ஊட்டும் வகையில் அழகுபட படைக்கப்பட்டுள்ள அற்புதமான கதையே 'சபலம்' எனில் மிகையாகாது.

"சிறுகதையில், எடுத்த கதைப் பொருள் உணர்ச்சி புலப்பட விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்... ......நோக்கம், குறிக்கோள், செயல், உணர்வு ஆகியவை சிதறுமல் ஒன்றுபட்டு அமையவேண்டும்" என்று கூறுகிறார் **டாக்டர் மு. வ.** அவர்கள். அந்த அடிப்படையில் ஆக்கப்பட்டுள்ள உணர்ச்சி மயமான கதைதான் 'சபலம்' ஆகும். சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பே கூட சிறந்த சிறுகதைக்கு அடிப்படையாக அமையலாம் என அறிஞர் கருதுவர். 'சபலம்' சிறுகதையும் ஒரு சிறு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டே சிறந்த முறையில் படைக்கப்பட்டுள்ளது.

'இந்தோசிலோன் எக்ஸ்பிரஸ்' வண்டியில் ஒரு பெட்டியின் ஒரு பகுதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியே 'சபலம்' சிறுகதைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. அச் 'சூழ்நிலை அமைப்பே' கதைக்குச் சுவையையும், இறுதியில் சோகத்தையும் அளிக்கிறது.

சிறுகதைக்கே சிறப்புத்தருவது, அதன் **கதைக் கரு** (Plot) ஆகும். படிப்போர் இதயத்தில் நீங்காத இடம்பெற்றுக் 'கதை' சிறக்கக் காரணமாக இருப்பதே அதன் 'கரு' 'வாகும்' சிறுகதையில், 'கரு' மிகச் சிறந்து விளங்குகிறது. கதைக் கருவுக்கு முக்கியத்துவம் கொடுத்து இதனை ஆக்கியுள்ளார் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இந்தோ சிலோன் எக்ஸ்பிரசில் இரவுப் பயணம். குமரேசன், அவன் மனைவி சந்திரா, குழந்தை மூர்த்தி மூவரும்பயணம் செய்யும் பெட்டியிலே—எதிர்ப் பலகையிலேயே ஒருவாலிபன். நல்ல அழகன். கணவன் இருப்பதையும் மறந்தவள் போல அவனை அடிக்கடிப் பார்க்கிறாள் சந்திரா. ஜாடையாகப் புரிந்து கொண்ட குமரேசனுக்கோ மனங்குமுறுகிறது. குமரேசனோ தூங்குவதுபோல் பாவனை செய்து கொண்டு, அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந் தான். குழந்தையை அனைத்தவாறு பலகைக்குக் கீழே படுத்திருந்த சந்திராவின் பருவ அழகையே அவ்வாலிபன் பருகிக் கொண்டிருந்தான். அவ்வப் போது, அவள் கன்னங்களை வருடுவதற்கும் அவ்வாலிபனின் கரங்கள் தவறுவது இல்லை. இதைக் கவனித்த குமரேசன் பயங்கரமான ஒரு முடிவோடு, குழந்தையைத் தூக்கிக்கொண்டு அப்பால்

போகிறான். வாலிபனுக்கோ மகிழ்ச்சி. குமரேசனுக்கோ கொதிப்பு. குழந்தையைச் சன்னல் வழியே வீசி எறிந்தான். "ஒரு விபசாரியின் தொடர்பு இன்றோடு ஒழிந்தது"—அவன் மனம் பேசிற்று.

தற்செயலாக முன் உட்கார்ந்திருந்த இடத்தின் மீது அவன் பார்வை பாய்கின்றது. வாலிபனின் கரங்கள் நடுக்கமின்றி சந்திராவின் கன்னத்தில் விளையாடின. திடீரென விழித்துக்கொண்ட சந்திரா, 'சீ' என்ற சப்தத்துடன் துள்ளிக் கிளம்பினாள். வாலிபனின் கன்னத்தில் அவள் கரங்கள் மாறிமாறி விளையாடின.

குமரேசு அருகே வந்தான். 'அத்தான்' எனக் கட்டிக்கொண்டாள். என் சிறுவயதில் இறந்து போன அண்ணன் மாதிரி இருந்தது...பார்த்தேன்... இந்தப் பாவி..." என்று விம்மி விம்மியழுதாள்.

குமரேசனுக்கோ மயக்கம் வருவதுபோல் இருக்கிறது."

—'சபலம்' கதையின் சுருக்கம் இவ்வளவே. 'கதைக்கரு'வின் சிறப்பும் இதன் மூலம் நன்கு புலப்படுகிறதன்றோ?

ஆங்கில அறிஞர் **செட்ஜ்விக்** என்பவர், "சிறுகதையின் தொடக்கமும் முடிவும் குதிரைப் பந்தயம்போல் சுவைமிக்கனவாக அமையவேண்டும்" என்று கூறியுள்ளார், எந்தக் கதைக்குமே, தொடக்கம்—முடிவு இரண்டும் சிறப்பாக அமைய வேண்டும் என்பர்.

"காற்றைக் கிழித்துக்கொண்டு 'இந்தோ—சிலோன் எக்ஸ்பிரஸ்' திருச்சி நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. சென்னையில் இரவு 8-மணிக்கு வண்டியில் ஏறியவர்கள் அலுப்போடும், களைப் போடும் போராடிக் கொண்டே முதுகை வளைத்துக் கொண்டே அமர்ந்திருந்தனர்......" —இங்ஙனம் தொடங்குகிறது, சபலம் சிறுகதை. 'பறந்து' கொண்டிருக்கிற இந்தோ—சிலோன் விரைவு வண்டியை எதற்காகத் தொடக்கத்திலேயே குறிப்பிடவேண்டும்? படிப்போரின் ஆர்வமும் அதிகரிக்கத் தொடங்குகிறது. அந்த வண்டியில் ஒருவன் மட்டும் 'அலுப்பைப் பற்றிய அக்கரை எதுவுமில்லாமல்—ஏதோ ஓர் உணர்ச்சியில் அங்குமிங்கும் பார்ப்பதும், பலகைக்குக் கீழே கவனிப்பதுமாயிருந்தான்.' அலுப்பை மறந்திருக்கும் அந்த ஒருவனைப் பின்னால் குறிப்பிடத்தான், கதையின் தொடக்கத்தில் அலுப்போடும் களைப்போடும் போராடிக் கொண்டே அமர்ந்திருக்கின்ற பலரை நம் கண்முன் காட்டுகிறார் டாக்டர் கலைஞர்.

சிறுகதையின் தொடக்கத்தைப் போலவே, அதன் 'முடிவும்' சிறந்த முறையில் அமைய வேண்டும். அப்போதுதான், தொடக்கத்தில் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டிய அச்சிறுகதை, முடிவில் அன்னார் நெஞ்சத் திரையின் நீங்கா ஓவியமாக நிலைத்து நிற்கும்.

"......இறங்கியவுடன் கேட்டாள், "எங்கே குழந்தை?" என்று!

கண்ணீர் வழிந்தோட அவன் சொன்ன பதில்: 'இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது' என்பதுதான்!

ஏ! அவசரக்கார குமரேசா!

சபலக்கார முட்டாளே!

—என்ற ஒலி, நாலாபுறமிருந்தும் அவன் காதில் சாட்டையாய் ஒலித்தது.

'இந்தோ—சிலோன் எக்ஸ்பிரஸ்' கடலூரிலிருந்து புறப்பட்டது.'

—இவ்வாறு 'சபலம்' சிறுகதை முடிகிறது. தொடக்கத்தில் 'பறந்து' கொண்டிருந்த எக்ஸ்பிரஸ், 'சபலக்கார முட்டாளாக' குமரேசனை ஆக்கிவிட்டுக் கடலூரிலிருந்து புறப்படுகிறது. கதையும் முடிகிறது. படிப்போரின் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது. ஆம்! அவசர புத்தியினால் விரைவுவண்டியின் சன்னல் வழியாக வீசி எறியப்பட்ட அக் குழந்தையை எண்ணிக் கண்கலங்க வைக்கின்றார், டாக்டர் கலைஞர் அவர்கள். அன்னார் எழுத்தாற்றலின் முழுவெற்றிக்கான காரணத்தை அப்போது தான் புரிந்து கொள்கின்றோம்.

மேலும், 'தரமான சிறுகதையின் தன்மையே அதன் ஒருமைப் பண்பில்—முழுமை நிலையில்தான் உள்ளது. தொடக்கத்திலிருந்தே ஒரு குறிக்கோளை மட்டும், ஒரு கருத்தை மட்டும் நிலைநாட்டுகின்ற வகையில் சிறுகதையின் போக்கு அமையவேண்டும்' என்கிறார் **பீட்டர் வெஸ்ட்லண்ட்** என்னும் அறிஞர். (Here we have the test of the short story-Unity. Right from the opening sentence there must be one aim only; there must be one idea only to be established.—Peter westland-Literary Appreciation. p. 241)

"குறித்த ஓர் **ஆளைத்** தேடிச் செல்பவரின் ஊர்ப்பயணம் போல் வேறு எதுவும் குறுக்கிடாமல்" ஒரே நோக்கம் உடையதாகச் சிறுகதை அமைதல் வேண்டும் என்று கூறுகிறார் **டாக்டர் மு. வ.** அவர்கள். சமுதாயத்தில் குமரேசனைப் போன்ற அவசரக் காரர்களும் சபல புத்தி உடையவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை நிலைநாட்டும் **'ஒரே நோக்கமாகச்'** 'சபலம்' சிறுகதை அமைந்திருக்கிறதன்றோ? "இந்தத் **'தாசி'** அவனோடு போகட்டும்" என்று அவசரப்பட்டு—சபல புத்திக்கு ஆட்பட்டுத் தாய்க்குலத்தின் ஒளிவிளக்காகத் திகழும் தன் மனைவியையே 'தாசிகுலம்' எனக் கூசாது பேசிவிடும் குமரேசன் போன்றோர் திருந்த வேண்டும் என்பதும் கதையின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

"அழகுக்காகத்தான் சந்திராவை அவன் மணம் புரிந்தான். அவள் வீட்டுக்கு வந்த பிறகு **அறிவும்** நிரம்பியவள் என்பது கண்டு மகிழ்ச்சி கொண்டான்" என்று ஒரு கருத்தையும் காரணத்தோடு கூறுகிறார் டாக்டர் கலைஞர். ஆரம்பகாலத்தில் அழகும் அறிவும் நிரம்பியவளாகக்கண்ட அதே ஆரணங்கைத்தான், 'தாசி' என்று பேசிக் களங்கப் படுத்த முனைகின்றான்; அதன் மூலம் 'சபலக்கார முட்டாளாகத்' தன்னை ஆக்கிக்கொள்கிறான், குமரேசன். இறுதியில் அவனுக்காக நாம் அனுதாபப்பட வைக்கின்றார், டாக்டர் கலைஞர். அதுதான் அவரது கதைத்திறனுக்குக் கிடைத்த வெற்றி.

கதையில் பிறநிகழ்ச்சிகள் சில இருப்பினும், அவை அனைத்தும் இந்த ஒரே நோக்கத்திற்கு

வலுவூட்டும் பின்னணியாகவே அமைக்கப்பட்டுள்ளன. ஓடிக்கொண்டிருக்கின்ற புகைவண்டியில் ‘கும்பகர்ணலோக’த்தைப் படைத்திருப்பது, இந்நிகழ்ச்சியைத் ‘தனிமைப்’ படுத்தவே ஆகும். பொக்கைவாய்க் கிழவி ஒருத்தி, குழந்தை மூர்த்தியுடன் கொஞ்சியது, எதிர்ப்பலகையிலிருந்த அந்த வாலிபனின் ‘வெடிச்சிரிப்புக்’குக் காரணமாக அமைந்து, அவ்வாலிபனைச் சந்திராவின் ‘கவனத்திற்கு’ உரியவனாக ஆக்கிவிடுகிறது.

‘அவள் நீலக்குறுவிழிகள் மட்டும் எதிர்ப்பக்கத்திலுள்ள அந்த வாலிபனையே அடிக்கடி விழுங்கிக் கொண்டிருந்தன.’ எனக் குறிப்பிடுவதன் மூலம், குமரேசனை மட்டுமல்ல—படிப்போரையும் கூட சந்திரா மேல் சந்தேகப்படும் ‘சபல’ புத்தி உடையவர்களாக—ஆக்க முனைகிறார் டாக்டர் கலைஞர். அதற்கு உறுதுணையாக அவ்வாலிபனின் தோற்றத்தையும் அடுத்து வருணிக்கத் தொடங்கிவிடுகிறார்.

“அந்த வாலிபன் நல்ல அழகன். விசாலமான கண்கள். அரும்பு மீசைகள். அழகை அதிகப்படுத்த பளபளப்பான பட்டுச்சட்டை...” இப்படி அவனை வருணிக்கவேண்டிய அவசியம் என்ன? சந்திரா அந்த வாலிபனின் அழகைக் கண்டுதான் அடிக்கடிப் பார்க்கிறாள் என்று ‘படிப்போரும்’ நினைக்கும்படி மிகத்திறமையாகத் தன் எழுத்தாற்றலைப் பயன்படுத்துகிறார், டாக்டர் கலைஞர். அவள் அழகுக்காக அவ்வாலிபனைப் பார்க்கவில்லை என்பதும், சிறுவயதிலேயே இறந்துபோன அண்ணன் மாதிரி இருந்ததால் தான் பார்த்திருக்கிறாள் என்பதும் குமரேசனுக்கு மட்டுமன்று நமக்கும் இறுதியில்தான் புரிகிறது.

அப்படியாயின், அவ்வாலிபன் முன்பு தன் கன்னத்தை வருடும்போதெல்லாம் விழித்துக் கொள்ளும் சந்திரா, ஏன் பேசாமல் ‘குழந்தையைத் தட்டியபடியே’ மறுபடியும் கண்களை மூடிக் கொள்கிறாள்? குமரேசன் உள்ளம் குமுறும் எரிமலையாவதற்கு, இச்செய்கைதானே காரணம் எனில், அங்கேயும் சிந்தனைக்கு இடம் வைத்துள்ளார் டாக்டர் கலைஞர். வாலிபனின் கரங்கள் சந்திராவின் கன்னத்தில் வருடியபோதெல்லாம், அருகில் படுத்திருக்கும் தன் அருமைக் குழந்தைதான் வருடுகிறது என்று எண்ணிக்கொள்கிறாள் அவள். அதனுற்றான், ஒருமுறை விழித்தபோது ‘சிணுங்கிடும்’ குழந்தைக்கு ஒருமுத்தம் கொடுத்துவிட்டு அதைத் ‘தட்டிகொடுத்தபடி’ தூங்குகிறாள். மறுமுறை, விழித்தபோது, குழந்தை சிணுங்கவில்லையாதலால் அதனைத் ‘தட்டியபடியே மறுபடியும் கண்களை’ மூடிக் கொள்கிறாள். வாலிபன் வருடியதை, குழந்தை வருடியதாகவே கருதியதுதான் சந்திராவின் அமைதிக்குக் காரணம் என்பதை‘உய்த்துணர’ வைத்துள்ள திறன் பாராட்டக் கூடியதாகும்.

படிப்படியாகக் குமரேசின் நெஞ்சில் வெறுப்பு வளர்வதையும்; அது ஆத்திரமாக மாறுவதையும் நிகழ்ச்சிகளுடே அழகுபட எடுத்துக்காட்டிக் கொண்டே செல்லுகின்றார் டாக்டர் கலைஞர். முதலில்...சந்திரா அவ்வாலிபனை அடிக்கடிப் பார்ப்பதைக் குமரேசு ‘ஜாடையாகப் புரிந்துகொண்டான்.’ —ஏதாவது சொல்லிவிடவேண்டுமென்று அவன் மனங்குமுறியது—நினைத்துப் பார்க்கமுடியாதநிலை—நெஞ்சிலே இந்தப் போராட்டம்-முழுதுங்கவனித்து ஒருமுடிவு கட்டிவிடவேண்டுமென்ற தீர்மானம், அவனை அமைதிப்படுத்தியது.

அடுத்து, சந்திராவின் புன்சிரிப்புக்குக் குமரேசிடமிருந்து ‘பதில் சிரிப்பு’ இல்லை. —எப்படியுங் கையுங் களவுமாகப் பிடிப்பட்டு விடுவாள் என்று துடித்துக் கொண்டிருந்தான்—அவளை ஒருமுடிவு கட்டுவதற்காக இமைகளின் இடுக்கில் ஒளிந்து கொண்டிருந்தன, அவன் பயங்கர விழிகள்—சந்திரா, குழந்தைக்குக் கொடுத்த முத்தம், அவனை நெருப்பில் தள்ளி எண்ணெயை ஊற்றுவதாயிருந்தது—பின்பு, அங்கு உட்கார முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. எரிமலையாகி விட்டான். பூகம்பமானது அவன் உள்ளம்—பயங்கரமான ஒரு முடிவுடன் எழுந்தான் — குழந்தையை வீசி எறிந்தவுடன் அவன் மனம் சிறிது சாந்தி பெற்றது. ‘...இந்தத் தாசி அவனோடு போகட்டும்’ என்று அவன் மனம் பேசிற்று. – வாலிபனின் கன்னத்தைச் சந்திராவின் கரங்கள் ‘பதம்’பார்த்ததைப் பார்த்தவுடன், அவனுக்கு மயக்கம்’ வருவது போலிருந்தது. —ஆத்திரமாக ஏதோ சொல்லப்போனான்— “குழந்தை எங்கே? அத்தான்?” என்ற கேள்வியால், அவன் முகம் கருத்து விட்டது. மீண்டும் அதே கேள்வி. ‘கண்ணீர்’ வழிந்தோட அவன் பதில் சொல்லும் நிலை. ‘அவசரக்காரன்; சபலகார முட்டாள்’ என்னும் ஒலி அவன் காதில் சாட்டை ஒலியாய் ஒலித்தது.

—மேற்காணும் வரிகள் அனைத்தும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டவை அல்ல. நிகழ்ச்சியின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் ஊடே, குமரேசின் மனநிலை பற்றிய படப்பிடிப்பே மேற்காணும் வரிகள் ஆகும். கதைக் ‘கரு’வின் தொடக்கம் முதல் முடிவு வரை ‘ஒரே நோக்க’த்தோடுதான் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெற்றெனப் புலப்படுகிறதன்றோ?

‘பகவான் பிரத்யட்சமாவது போல’

‘வயிறு காய்ந்து வாடுபவனுக்கு எதிரே வட்டில் நிறையப் பொங்கலை வைத்தது போல...’

‘நட்சத்திரத்துக்குக் குறிவைத்தபோது சந்திரனே விழுந்துவிட்டது போல...’

—போன்ற உவமை நயங்களையும் இணைத்து, ஒப்பற்ற முறையில் ‘சபலம்’ சிறுகதையினைப் படைத்துள்ளார், டாக்டர் கலைஞர். ‘பிரச்சாரம்’ வெற்றி பெற்ற அளவுக்குக் ‘கதையம்சம்’ வெற்றி பெறவில்லை என்று கண்மூடித்தனமாகச் சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய சிறுகதைகளை ‘விமர்சனம்’ செய்யும் ‘பிறவி’களும் இருக்கத்தான் செய்கிறார்கள். சீர்திருத்தம், பகுத்தறிவு எண்ணங்கொண்ட எழுத்தாளர்களின் கதைகளில் **‘கதையம்சம்’** இருக்காது என்ற பொதுக் கருத்தினை மக்கள் மத்தியில் நிலைநிறுத்தவேண்டும் என்ற உட்நோக்கம் உடையவர்களாகச் சிலர் இருப்பதே, அத்தகைய ‘விமர்சனம்’ எழுவதற்குக் காரணமாகும். அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லுகின்ற வகையில், ‘சபலம்’ சிறுகதை அமைந்திருப்பது பாராட்டக் கூடிய ஒன்றாகும். முழுக்க முழுக்கக் ‘கதையம்சத்’திற்கே முக்கியத்துவம் கொடுத்து, ‘சபலம்’ சிறுகதையைப் படைத்துள்ளார் டாக்டர் கலைஞர். ‘பிரச்சாரம்’ சிறக்க மட்டுமன்று—‘கதையம்சம்’ சிறக்கவும் கதை எழுத முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, இச்சிறுகதை ஆகும். டாக்டர் கலைஞர் அவர்களின் எழுத்தாற்றலை—கற்பனைத் திறனை—உணர்ச்சி உள்ளத்தை அறிந்துகொள்ள உதவும் ஒப்பற்ற அளவுகோலாகவும் ‘சபலம்’ சிறுகதை ஒளிர்கின்றது.

"தமிழவேள் கலைஞர் பொன்விழா மலர்" வெளியிடும்
தங்களின் "காஞ்சி" இதழுக்கு எங்கள் நிறுவனத்தின் உளமார்ந்த நல்வாழ்த்துகள்!

திருமணம் மற்றும் பண்டிகை காலங்களுக்குகந்த தரமான
காஞ்சீபுரம் பட்டு சேலைகள், டிஷ்யூ, சோளி மற்றும்
பாவாடை ரகங்கள் வாங்கிட சிறந்த கூட்டுறவு நிறுவனம்

தந்தி: கருணசில்க் போன்: 2951

டாக்டர் கலைஞர் கருணாநிதி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். No. K. H. 4.

88-89, காந்தி சாலை, : : காஞ்சீபுரம் - 631501.

R. பார்த்தசாரதி,
கைத்தறி அலுவலர், காரியதரிசி.

சா. கிருட்டிணன்,
தலைவர்.

மு. சீனுவாசன், A. பொன்மொழி, N. முருகன், P. வேலாயுதம்,
V. வரதராஜன், K. குப்புசாமி.
இயக்குனர்கள்.

தந்தி: "கான்கோமில்ஸ்"

தொலைபேசி எண்: அலுவலகம்: 2330
நிர்வாக இயக்குநர்: 2916
,, இல்லம்: 2267

காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை

(வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி எண். 2. காஞ்சீபுரம்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	...	60 இலட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம்	...	22.49 இலட்சம்
தமிழ்நாடு அரசின் பங்கு முதலீடு	...	11.49 இலட்சம்
கதிர்களின் எண்ணிக்கை	...	13680

உற்பத்தியாகும் நூலின் எண்கள்: 40-ம் நெ. 60-ம் நெ. 80-ம் நெ. 100-ம் நெ.
2/60-ம் நெ. 60 ம் நெ. கோன் முதலியன.

மிகவும் தரமான நூலை உற்பத்திசெய்து நெசவாளர்களின் நலனை உத்தேசித்து மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றோம். சிறப்புமிக்க இவ்வாலையில் பங்குதாரர்களாகி பெருமைபெற பொதுமக்களையும் கூட்டுறவு சங்கங்களையும் அழைக்கின்றோம்.

விவரங்களுக்கு நிர்வாக இயக்குநரை அணுகுங்கள்.

திரு. நா. ஆதிமூலம், எம். எஸ்ஸி.,
டெபுடி கலெக்டர்/நிர்வாக இயக்குநர்.

அ. கிருட்டிணன், பி.ஏ.,
தலைவர்.

“பொன் விழாக் கலைஞரைப் போற்றுதும்! போற்றுதும் !!”

(பாவலன் அரிமதி தென்னகன்)

★

யான்வாழ் நாளும் கலைஞர் வாழிய!
பாவல! காண்நீ பைந்தமிழ் நிலத்தின்
அவலந் தன்னை; அன்னைத் தமிழின்
வீழ்ச்சியின் தொடக்க விரைவினை; அதோபார்;
தமிழனின் தலையைத் தமிழனே கொய்வான்.
தமிழினைத் தாழ்த்தித் தமிழனே மகிழ்வான்;
ஏறும் தமிழனைத் தமிழனே இறக்குவான்;
மாற்றான் காலடி மறத்தமி ழன்தலை!!
வேற்றான் தலைமை வேண்டும் தமிழினம்!!
எச்சில் வெல்லம் எடுத்தெறி வார்க்கு
வீடணத் தமிழன் வேலியாய் நிற்பான்!!
என்றழி வாரெனும் எதிரியைத் தாக்கும்
தன்னினத் தலைவனைத் தமிழனே தகர்ப்பான்!!
தமக்கென வாழும் தலைவனைத் தமிழினம்
அமிழ்த்துக் கொன்றிட ஆர்வம் காட்டிடும்!!
வளர்த்த மரத்தை வளர்ந்த விழுதுகள்
தளர்ந்த நிலையினில் தாங்கிட நினையா!!
விண்மீன் தன்னை வென்றிட மின்மினி
எண்ணிடும் கொடுமை இன்றை நடைமுறை!!
இனப்பற் றில்லா இனமாய்த் தமிழினம்!
ஒருமையின் பெயரால் உரிமைகள் பறித்தல்!
பெருமை எனவே பேசிடும் மடமையும்,
ஒற்றுமை முழக்கி ஒடுக்கிட நினைக்கும்
எத்தர் வெல்லும் ஈனமும் ஈங்கே!!
வீழ்ந்த தமிழினம் எழுந்ததும் உண்மை;
எழுந்த தமிழ்க்குலம் இனப்பற் றின்றி
வீழ்ந்து வருவதோ உண்மையில் உண்மை!!
தாழ்ந்து வருமினம் தலைநிமிர் வடைய
உழைக்கும் தலைவன் உயர்கரு ணாநிதி
ஆரூர்ச் சோழன், அண்ணனின் இளவல்
வாழ்நாள் கூடின் தமிழ்நிலம் வளரும்!!
இனவர லாற்றில் எழுச்சி பொங்கிடும்!!
தனித்தனிக் கொடிகளில் தமிழ்க்கொடி
விளங்கும்
இனிக்கும் நாளும் ஈங்குறப்
பொன்விழாக் கலைஞரைப் போற்றுதும் வாநீ!!

வான்கோடைக் கலைஞர்

(கவிஞர் கருமலைத் தமிழாழன்)

✳

செஞ்சுடர் காந்தி யண்ணன்
 செம்முக அறிவின் கீற்றல்
அஞ்சுகப் பொய்கை தன்னில்
 அன்றலர்க் கமலப் பூவே!
மஞ்சுகள் பொழியும் நீராய்
 மாத்தமிழ்க் கவிதை ஊற்றே!
கொஞ்சிடும் மழலை யன்பாய்க்
 குலவிடும் நட்பின் காற்றே!

உலவிடும் பகைமை இந்தி
 உயிரினை மாய்க்கும் கூற்றே!
நிலவிடும் எதிர்ப்பைத் தாக்கி
 நிலமெலாம் தமிழே ஆக்கி
துலங்கிடும் கொள்கை கொண்டு
 துடிப்புடன் செயல்க ளாற்றி
நிலவெனத் தெவ்வர் நெஞ்சும்
 நிறைந்திடும் எளிமைக் கோவே!

வாரியம் அமைத்து வீடு
 வானுயர் தந்து வீதிப்
போரிடும் பிச்சை நீக்கிப்
 பெருந்துயர் தீர்த்து வைத்து
நேரினில் காணு கண்கள்
 குறைகளைக் களைந்து; காலால்
ஊரினை இழுத்த கீழ்மை
 நிலையினை யொழித்த வேந்தே!

தாழ்குலக் கலப்பு கொள்ள
 தகுமுறைச் சட்டம் செய்து
வாழ்வினில் பாவின் வேந்தர்
 வழியினில் புரட்சி யேற்றுக்
காழ்ப்பினைப் பெரியார் சொன்னக்
 கருத்தினில் தகர்த்தெ றிந்தே
ஊழ்வினை மாற்றி எல்லோர்
 உளம்நிறைக் கருணா வாழி!

1948-ல் கலைஞர் எழுதிய கட்டுரை

பேரறிஞர் அண்ணா திராவிடர் கழக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி நின்ற காலம்.

'சுதந்திர நாள்' துக்க நாளா, இன்ப நாளா என்பதனை ஒட்டி அறிஞர் அண்ணா அவர்களுக்கும், தந்தை பெரியார் அவர்களுக்கும் கருத்து மாறுபாடு ஏற்பட்டிருந்த காலம்.

கழக எதிரிகள் பிளவு ஏற்பட்டு இருவரும் பிரிந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த நேரம்.

இந்நிலையில் இரண்டாவது சுதந்திர நாள் (1948) நெருங்கி வந்தது.

இந்தி, தமிழ் நாட்டில் கட்டாயம் பாடமாகத் திணிக்கப் பெற்றது.

தமிழகம் போருக்குப் பொங்கி எழுந்தது.

ஒதுங்கி நின்ற அறிஞர் அண்ணா அவர்களும் **17—6—48**ல் திருவாரூரில் நடைபெற்ற நமசிவாயம் என்பவர் திருமணத்தில் பேசும் போது **"அண்ணாத்துரை பாரத காலத்துப் பாண்டவர்போல அஞ்ஞாத வாசம் புரிகிறானே ஒழிய விதுரனைப்போல வில் ஒடித்து விடவில்லை. நாளைக்கே விடுதலையில் ஒரு அறிக்கை வெளிவந்து போருக்குப் புறப்படுக என்றால் முதல் வரிசையில் அண்ணாத்துரையின் பெயர்தான் இருக்கும்"** என்று பேசினார்.

கழகத்தவர் அனைவரும் களிப்பில் மிதந்தனர்.

ஃ ஃ ஃ

இந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கையிலிறங்கத் திராவிட கழகம் முடிவு செய்து விட்டது. முதல் போராட்டம் ஆகஸ்டு 10-ஆம் தேதியன்று ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பெற்றது.

2—8—48 திங்கள் காலை 10-30 மணிக்கு மத்திய திராவிடர் கழக நிர்வாகக் குழு அவசரக் கூட்டம் சென்னை மவுண்டுரோடு மீரான் சாயபு தெரு, 1-ஆம் எண் இல்லத்தில் நடைபெற்றது. குழுத்தலைவர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமை வகித்தார்.

பெரியார் ஈ. வெ. ரா, தி. பொ வேதாசலம், கே. கே. நீலமேகம், அறிஞர் அண்ணா ஈ. திருநாவுக்கரசு, பா. சிதாபதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. சித்தையன், டாக்டர். தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், சி. டி. டி. அரசு, என். வி. நடராசன், என். ஜீவரத்தினம், சி. தங்கராஜ், கே. கோவிந்தசாமி, ஆ. திராவிடமணி, எஸ். நீதி மாணிக்கம், சி. முனுசாமி, வி. ரங்கராஜ், ஜி பாராங்குசம், கே. ஏ. மணியம்மையார், பி. பழனிசாமி. ஆகியோர் வந்திருந்தனர்.

கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

"தமிழ் நாட்டில் ஒன்று முதல் ஆறுவது பாரம் வரையில் அரசாங்கம் இந்தி மொழியைக் கட்டாய மில்லையென்று சொல்லிவிட்டு, ஒரு சிலர் தூண்டுதலால் 1 முதல் 3 ஆம் பாரம் முடிய அவசியக் கட்டாயமாகச் செய்திருப்பதைக் கண்டு இக்குழு கண்டிக்கிறதுடன், ஒருவகையிலும் இஷ்ட பாடமாகவோ, கட்டாய பாடமாகவோ, இந்திமொழி மேற்கண்ட வகுப்புகளில் பாடமாக வைக்கக் கூடாதென்று தீர்மானிக்கிறது."

"முதல் நடவடிக்கையாக,—ஆகஸ்டு 10ந் தேதி முதல் சென்னையில் முக்கியமாய், தொண்டை மண்டலம் உயர்தரப்பள்ளி அல்லது இந்து தியாலஜிகல் உயர்தரப் பள்ளியில் இந்திப் படிக்கச் சொல்லப்படும் பிள்ளைகளைச் சமாதான முறையில் படிக்கச் செல்லவேண்டாமென்று மறியல் தொடங்குவதென்று தீர்மானிக்கிறது. இந்த மறியலைத் தொடங்குவதற்கு முதற் படைத் தலைவராக (சர்வாதிகாரியாக) இருந்து மறியலைத் துவக்கி நடத்தும்படி இக்குழு தோழர் சி. என். அண்ணாதுரை எம்.ஏ, அவர்களை நியமிக்கின்றது.

ஃ ஃ ஃ

இச் செய்தி கேட்டு கழகத்தவர் போலவே அரசியலில் அதி தீவரவாதியான கலைஞரவர்களும் களிப்புக் கடலில் மிதந்து 10—8—48 முரசொலி 'அரையணா' வார இதழில் "அழைக்கிறார் அண்ணா அறப்போருக்கு!" என்று முதல் பக்கத்தில் தலைப்பிட்டு, அண்ணனைக் கோட்டையிலிருந்து குதிரை மீதேறி போருக்குப் புறப்படும் தளபதியாகப் படம்போட்டு "அண்ணாவுக்கு வாழ்த்து" என்று ஓர் கட்டுரையையும் எழுதினார்.

அறிஞர் அண்ணாமீது கலைஞருக்கு இருந்த ஆழமான ஈடுபாட்டை இக்கட்டுரையில் படித்துணரலாம்.

-தி. வ. மெய்கண்டார்

"அண்ணாவுக்கு வாழ்த்து"
(டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி)
10—8—48 முரசொலி.

எங்கள் கலைஞரவர் என்றும் இளையரவர்...

கவிஞர் இரா. கண்ணிமை

அழியும் உலகில் அழியாச் செல்வம்
அடைந்தே சிறப்பவர் யார்?
பொழியும் மடமைக் கண்ணீர் துடைத்த
புரவலர் எம் கலைஞர்!

எதையும் தாங்கும் இதயத் தோடே
எதையும் ஏற்பவர் யார்?
புதையும் தங்கக் கொள்கை தோண்டிய
புதுமையர் எம் கலைஞர்!

கொல்லையிற் மணக்கும் முல்லைப் பூவென
கொடைமைத் தன்மையர் யார்?
எல்லையில் லாத இலட்சிப் பணியை
ஏற்றவர் எம் கலைஞர்!

அள்ளும் புவிக்கு அறங்கள் செய்தே
அறிவொளி வீசிய தார்?
கொள்ளும் இன்பக் கடமைக் கனியை
கொடுத்தவர் எம் கலைஞர்!

பற்றிலா நெஞ்ச பாசப் பிணைப்பால்
பணிந்தே கிடப்பவர் யார்?
புற்றீ சல்போல் புகுந்த புன்மையை
புதைத்தவர் எம் கலைஞர்!

குன்றின்மே லிட்ட விளக்கினை போல
குறியாய் ஒளிர்பவர் யார்?
மன்றம் சிறக்கும் மாசிலா அறிவு
மாலையர் எம் கலைஞர்!

ஊரவர் பிள்ளைக்கு ஊற்றென உதவிடும்
உண்மை ஆர்வலர் யார்?
சேரர் பரம்பரை மன்னர்கை கொடைத்திறம்
சீர்சால் எம் கலைஞர்!

ஏணியாய் நின்று ஏற்றம் அளித்தே
என்றும் மகிழ்பவர் யார்?
தோணியாய் தொண்டு கடலைத் தாண்டும்
தோன்றவர் எம் கலைஞர்!

கலங்கரை விளக்காய் நின்று நிலவிடும்
கலங்கா நெஞ்சினர் யார்?
நலம்பல நாட்டி நானிலம் காக்கும்
நாயகர் எம் கலைஞர்!

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குத வாதென்
றெடுத்தும் உரைப்பவர் யார்?
காட்சிக் குறியர் கடுஞ்சொல் அல்லர்
காவலர் எம் கலைஞர்!

விக்குளில் நீராய் இருளில் ஒளியாய்
விளங்கி நிற்பவர் யார்?
முக்கனிச் சுவையாம் இலக்கியச் சுளையாய்
முகிழ்த்தவர் எம் கலைஞர்!

நிரவா றதனை நீக்கிக் காட்டி
நீதியை உரைத்தவர் யார்?
வரவா றதனை வடித்துக் காட்டிடும்
வள்ளல் எம் கலைஞர்!

கலக்கம் இல்லா கண்ணியப் பொருளை
கடிதே கண்டவர் யார்?
இலக்கணம் கொடைக்காய் இனிதே எழுதிய
இலக்கியம் எம் கலைஞர்!

இமிழ்கடல் சூழ இன்றமிழ்த் தேரை
இயக்கிடும் விற்பனர் யார்?
அமிழ்தினைப் போன்ற அன்பின் நெறியை
அணிந்தவர் எம் கலைஞர்!

அறிஞர் அண்ணா அருமைத் தம்பியாய்
அகிலம் சிறந்தவர் யார்?
வறிஞர் வாழ்வில் வளம்பல சேர்த்த
வணங்கும் எம் கலைஞர்!

நன்றி ஒழுக்கம் நற்றிரு பாதையில்
நடக்கத் தூண்டுவ தார்?
ஒன்றி ஒழுகும் ஒல்காப் புகழ்சேர்
உத்தமர் எம் கலைஞர்!

பகுத்தறி பெரியார் படையில் உலவிய
பாசறை மறவர் யார்?
வகுத்தறி யாத வழக்கினை மாற்றிடும்
வாஞ்சையர் எம் கலைஞர்!

புரியா புதிரை புரிந்திடச் செய்யும்
புரட்சி குணத்தவர் யார்?
விரியா மனதை அறிந்திட வைக்கும்
விவேகியர் எம் கலைஞர்!

என்றும் இளையராய் நன்றே இலங்கிடும்
ஏறு போன்றவர் யார்?
அன்றும் இன்றும் அறிவு விழிகளை
அழைக்கும் எம் கலைஞர்!

நன்விழா நாளை நமக்கே ஈந்து
நன்மைகள் செய்பவர் யார்?
பொன்விழா கண்ட பொன்மனச் செம்மல்
புகழ்சேர் எம் கலைஞர்!

பொன்விழா காணும் புன்னகை மன்னன்!

மு. கண்ணுசாமி

நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐம்பது வயது நிறைந்து ஐம்பத்து ஒராவது வயதில் தனது வாழ்க்கை பயணத்தை துவங்குகிறார். அரசியல், கலை, சமுதாய பணி முதலியவற்றோடு தனது வாழ்க்கையை இணைத்துக் கொண்டு அதற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு ஓயாது உழைத்து வரும் புன்னகை மன்னரான நமது முதல்வரை பாரத துணைக் கண்டமே பாராட்டி மகிழ்கிறது. அவர் ஆற்றியுள்ள கடந்த கால நற்பணிகள் சிலவற்றை நினைவு கூர்ந்து அவர் ஆற்ற எண்ணியுள்ள, ஆற்றவேண்டிய எதிர்கால பணிகள்—சிறந்து விளங்கி வெற்றி பெற வாழ்த்துவோம்.

தி. மு. க. ஜனநாயக வழியில் அரசியவில் ஈடுபட தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை இந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக சலியாது உழைத்து வரும் மாபெரும் தலைவர். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் காலமெல்லாம் உரிமைகுரல் எழுப்பி ஏழை மக்களின் இன்னலை தீர்க்க கண் துஞ்சாது பணியாற்றி வரும் உத்தம தொண்டர். பத்திரிக்கைத் துறை, கலைத் துறை, இலக்கியத் துறைகளின் வாயிலாக பகுத்தறிவு கருத்துக்களையும், சமூக சீர்திருத்த கருத்துக்களையும், இலட்சியத் துடிப்புடன் தனது கொள்கையை பரப்பி வரும் உண்மையான புரட்சித் தலைவர். கண்ணொளி திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம், உடல் ஊன முற்றோர் நல்வாழ்வுத் திட்டம், கை ரிக்ஷாவை நீக்கி சைக்கிள் ரிக்ஷாவை வழங்கி ஏழை தொழிலாளிகளின் துன்பம் போக்கும் திட்டம், குடிசை வீடுகளை அகற்றி மாடி வீடுகள் கட்டி ஏழை மக்களை குடி புகுத்தும் திட்டம், அரசு ஊழியர்களின் குடும்ப நல திட்டம், முதலிய நலம் பயக்கும் திட்டங்களை நிறைவேற்றி வரும் மக்கள் தலைவர். நங்கவரம் விவசாயிகள் போராட்டம், தஞ்சை எஸ். எம். டி. பஸ் தொழிலாளர் போராட்டம், டால்மியாபுரம் பெயர் மாற்றப் போராட்டம், விலைவாசி குறைப்பு மறியல், மொழிப் போராட்டம் ஆகியவற்றில் ஈடுபட்டு சிறைக் கோட்டம் ஏகிய சிறைக்கஞ்சா செம்மல். இரண்டு காங்கிரஸ் கட்சியும் பிளவுபட்ட சமயத்தில் சில அரசியல் வாதிகளை போல் அற்ப மகிழ்ச்சி அடையாமல் மாறாக இரண்டு காங்கிரஸ் கட்சியும் மீண்டும் இணைய வேண்டும் என்று விரும்புகிறேன் என்று கருத்து சொன்ன கண்ணியர். முற்போக்கு எண்ணங்களுக்கு செயல் வடிவம் தந்து அதை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காக பாரத பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நமது கலைஞரின் ஆதரவை நாடிய போது பெருந்தன்மையுடன் குடியரசு தலைவர் தேர்தலிருந்து 1971-ம் ஆண்டு பொதுதேர்தல் வரையிலும் ஆதரவு அளித்து வெற்றியைத் தேடித் தந்து மாற்று கட்சியாளர்களின் நல்லெண்ணங்களுக்கு மதிப்பளிக்கும் பண்பாளர். தன் மீதும் தனது அமைச்சரவை மீதும் மாற்றுக் கட்சியினர் சாட்டிய ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு சட்ட மன்றத்தில் வரிக்கு வரி பதிலளித்து குற்றச்சாட்டின் அபத்தங்களை முறியடித்தது மட்டுமின்றி, நாட்டு மக்களும், உண்மை நிலையை தெரிந்துக்கொள்ள அதை புத்தகமாக வெளியிட்டு பெருமை தேடிக் கொண்டவர்.

தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் தனது மகனுக்கு பெண் எடுத்து தனது மகனுக்கு மண முடித்து நான் தாழ்த்தப்பட்ட மக்களின் சம்பந்தி என்று பெருமையோடு கூறி மகிழ்ச்சி கொள்ளும் ஜாதி பேதமற்ற சமுதாயம் சமைக்க துடிக்கும் சமதர்மவாதி. நாட்டு மக்களின் நலிவு நீங்கவும், நலமும் வளமும் காணவும் மாநில சுயாட்சி கோரி மத்திய அரசோடு உரிமைக் குரல் எழுப்பி உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்று முழக்கமிட்டு வரும் இலட்சியவாதி. நாட்டு மக்களின் நெஞ்சங்களில் அழியாத காவியச் சின்னமாக தாஜ்மகால் போன்று நீங்காத நினைவாக காலமெல்லாம் நினைத்திருக்கும் வண்ணம் தனது ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வங்கக் கடலோரம் கல்லறை எடுத்து அதை கண் போன்று பேணி காத்துவரும் அண்ணாவின் உண்மைத் தம்பி. இருபத்திரண்டு ஆண்டுகளாக ஓடாத திருவாரூர் தேரை ஓடவைக்க முயற்சி எடுத்து ஆத்திகர்களின் மகிழ்ச்சியையும், ஆசியையும் பெற்றவர், மக்களின் மனநிலையை உணர்ந்து நியாயமான பிரச்சனைகளில் உடனுக்குடன் முடிவெடுத்து மக்களின் குறை தீர்க்கும் நிறைமதியாளர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பொன்விழா நிறைவை மகிழ்ச்சியுடன் கொண்டாடி மனதார பாராட்டி வாழ்த்துவோம்.

கலைஞர் வாழ்க!

(கருமலைப் பழம்நீ)

(அகவல்)

வாழ்வு மலர்ந்தது! வானம் பொழிந்தது!
மண்ணில் வளமை மண்டிக் கிடந்தது!
தமிழர் ஆட்சி தழைத்தது! மூட
உமியாங் கொள்கை ஒழிந்தது! தூயத்
தெளிவால் மக்கள் சிறந்தனர்—என்றோர்
களிமிகும் காலம் கனிந்தது! யாரால்?
கனித்தமிழ்க் கலைஞர் கடும்உழைப் பாலே!

கனியே சுவையிதழ்! கமழும் கவிமனம்!
கருத்தே அறிவகம்! கனிவே இருவிழி!
அமிழ்தாம் திருக்குறள் அலரும் மலர்வனம்!
தமிழே உயிரென தழைக்கும் உயர்மகன்!

கலைஞர் என்பார்! கவிஞர் என்பார்!
கனியின் சாற்றில் கலந்த தேனைய்
இனிக்கப் பேசும் இயல்போன் என்பார்!
இருளாம் மூட இருளை கிழிக்கும்
மறவன் என்பார்! மகுடி என்பார்!
மணியாம் கொள்கை வடிவம் என்பார்!
பிழையாச் சோழன் பிறந்தான் என்பார்!
பெரியார் அண்ணா பிரிவால் சூழும்
தவிப்பை நீக்கும் தலைவன் என்பார்!
தனியே அவனைத் தமிழ்என் பேனே!

தமிழ்வேள் வாழ்க! தமிழாய்,
அமிழ்தாய் என்றும் அரசே! வாழ்கவே!

கருணா நிதியவர் வாழியவே!

(செல்வி எஸ். இராஜம் புஷ்பவனம். இலங்கை)

அன்னைத் தமிழின் அவலநிலை
அறுக்க வென்று துணிந்தெழுந்த
கன்னித் தமிழின் காவலனே!
கனிவாய் உம்மை வாழ்த்துகிறேன்.
கண்ணிய மிக்கத் தமிழினத்தின்
கடுந்துய ரொன்றை மாற்றிடவே
கண்ணியம் காக்கும் பெருந்தலைவ!
கருணா நிதியண்ணா வாழியவே!

வேழத்தை எதிர்த்த வீரர்களும்
வீரத்தை வளர்த்த மறவர்களும்
காலத்தை வென்ற காவியமும்
கன்னித் தமிழின் துணையானால்;
வேழத்தை வெல்ல வகைசெய்வீர்
வீரத்தை வளர்க்க துணைநிற்பீர்
ஞாலத்தில் தமிழர்தம் கண்ணியத்தை
நல்லற செயலால் வளர்த்திடுவீர்

என்றே உங்களை வாழ்த்துகிறேன்.
இனிய நினைவால் போற்றுகிறேன்
கண்ணுந் தமிழர் நெஞ்சமெலாம்
கனிந்த வாழ்த்தும் தங்களுக்கே!
குன்றாப் புகழும் சேரட்டும்
குவலயம் தங்களை வாழ்த்தட்டும்.
கன்னற் றமிழின் நற்றலைவர்
கருணா நிதியவர் வாழியவே

'தமிழே நீதான்!'

(சாப்டூர் சதுரகிரியான்)

உண்ணக் கிடைத்தாற் போதுமென்று
ஊரைச் சுற்றித் திரியாமல்
சின்னஞ் சிறிய பருவத்தில்
சிந்தனைச் சிறகை விரித்தோனே,
எண்ணக் கடலில் முத்தெடுத்து
ஏற்றங் காண வுழைத்தோனே,
உன்னை வாழ்த்தி வணங்குதலே
ஓங்குயர்த் தமிழை வணங்குதலாம்!

மலையைப் பெயர்த்த சிற்றுளிபோல்
மடமை தீய்த்த மன்னவனே,
கலையை யுயிராய்க் கொண்டதாலே
கலைஞ ரென்று பெயரெடுத்தோய்,
தலையைக் கொடுத்துத் தமிழ்காத்த
தன்னே ரில்லாத் தலைமகனே,
தலையைத் தாழ்த்தி வணங்குகின்றேன்
தமிழே நீதா னென்றுரைத்து!

எழுத்து வன்மை யொன்றாலே
ஈடே யில்லாப் புகழ்பெற்றோய்,
கழுத்தே தெரியாக் கனத்தோரின்
கயமை முறித்த கருத்தோனே,
பழுத்த பழமும் வியக்கின்ற
பகுத்தறி வுடைய கலைஞரேறே,
செலுத்து கின்றேன் நன்றிதன்னை
செந்தமிழ் வளர்ப்பாய் நீயென்று!

அண்ணா வழியில் நடக்கின்ற
அன்புக் கருணா நிதியரசே,
சொன்ன சொல்லை நிறைவேற்றித்
துன்பங் களைத்தே யாள்கின்ற
மன்ன னாக தமிழ்நாட்டில்
மக்க ளாட்சி நீசெய்தால்,
எண்ண மெல்லா மினிக்கின்ற
இன்றமி ழெங்கும் நடம்புரிவாள்!

ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்த பிறகும்...!

கல்வை பா. வரதன்

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தமிழகத்தில் தமிழர்கள் வாழ்ந்து வந்த நிலையே வேறு. அதனை தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினால் இன்றைய தமிழ் மக்கள் வெட்கத்தாலும் —வேதனையாலும்— சுயமரியாதை உணர்வாலும் உந்தப்பட்டு முகம் சிவப்பேறி கூனிக் குறுகிப் போவார்கள்.

அன்றாட நடைமுறை வாழ்க்கை அமைப்பிலும் —கல்வி—அரசினரின் வேலை வாய்ப்பு போன்ற சகல துறைகளிலும் தமிழ் மக்கள் தாழ்த்தி வைக்கப்பட்டனர்—முற்றிலும் அறவே ஒதுக்கி வைக்கப்பட்டனர். இந்த இழிநிலையை—கேடுகெட்ட முறையை மாற்றி அமைத்து மறுகோலம் செய்த மாபெரும் புரட்சி வீரர் தந்தை பெரியார் அவர்கள்தான் என்பதை நடுநிலையாளர் எவரும் மறுத்துவிடமுடியாது!

அத்தகு பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பாசறையில் பயின்று — அவர்தம் உயிர்கொள்கைகளை—லட்சிய முழக்கங்களை பட்டிதொட்டியெல்லாம் பரப்பிய பெருமை இன்றைய தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு என்பதை எவர்தான் எளிதில் மறைத்துவிட இயலும்!

நான்கு கோடி தமிழர்களின் நல்வாழ்வு கருதி— அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் உத்தமர் அண்ணன் கலைஞர் அவர்கள் ஐம்பது வயது நிறைவு பெறுகிறார். இது குறித்து கடந்த சில நாட்களாக தமிழகமெங்கும் கட்டுக்கோப்பாக விழா நடந்துகொண்டிருக்கிறது.

அண்ணன் கலைஞர் அவர்கள் பள்ளிப் பருவம் முதற்கொண்டே கழகப் பணி புரிந்து வந்த கடமை வீரர் ஆவார். இவர் தலைசிறந்த உத்தமத் தலைவர். நாவன்மை நன்கு வாய்க்கப்பெற்ற நாவுக்கரசர். உயர்ந்த எழுத்து வேந்தர். உன்னதமான நடிகர். அடக்கி ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் விடுதலை வீரர். மக்களது மறுமலர்ச்சியிலும்—நல்வாழ்விலும் அக்கரையும் ஆர்வமும் கொண்ட செயல் வீரர். தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றமே தன் வாழ்வின் நோக்கமெனக் கொண்ட ஒப்புயர்வற்ற பொதுநல மேதை.

கலைஞர் அவர்களின் அரிய பண்பாகிய தூய்மை என்னும் கூரிய ஆயுதத்தைக் கண்டு அஞ்சி நடுங்காத எதிரிகளே இருக்கமுடியாது.

இத்தகைய நேர்மையான பண்பாளர் தமிழகத்தின் முதல்வராகக் கிடைத்திருப்பது தமிழகம்செய்த தவப்பயன் என்றே கூறவேண்டும்.

அண்ணன் கலைஞர் அவர்கள் கண்ணியம் மிகுந்த கடமை வீரர் மட்டுமல்ல; மிகச் சிறந்த செயல் வீரரும் ஆவார்!

திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்த அத்தனை அறப் போராட்டங்களிலும் அயராது அஞ்சாது பங்குகொண்டு சிறை வாழ்வு வாழ்ந்த சிங்கத் தமிழ் மகன் ஆவார். காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் அரசு கட்டிலில் அமர்ந்திருந்தபோது அண்ணன் கலைஞர் அவர்களுக்கு கொடுத்து வந்த தொல்லைகளை —துன்பங்களை ஏட்டில் எழுதிக் காட்டிவிட முடியாது.

"அரசாங்கம் என்னை அழிக்க முயற்சிக்கலாம்; படைபலம் என்மீது பாய்ந்து வரலாம்; உலகம் முழுவதும் என்னை ஏளனம் செய்து எள்ளிநகையாடலாம்; எனினும் நீதியை நிலைநாட்டி ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைத்தே தீருவேன்" என்று வீர முழக்கமிட்டு போரிட்டு வெற்றி கண்டான் இலக்கிய வீரன் எமிலி ஜோலா என்பவன். அவ்விதமே கலைஞர் அவர்களும் தமது எழுத்துவன்மையால்—ஒப்புயர்வற்ற கனல் தெறிக்கும் பேச்சாற்றலால் இருபது ஆண்டுகால இருள் மிகுந்த காங்கிரஸ் ஆட்சியை விரட்டி அடித்தார்.

கலைஞர் அவர்கள் அறியாமை இருளைக் கிழித்தெறிந்த அறிவுச் சுடர்!

ஆதிக்கக் கோட்டையை தகர்த்தெறிந்த பகுத்தறிவுப் படைத் தலைவர்!

வக்கிரபுத்தி கொண்ட வைதீகத்தின் எதிரி!

கலைஞர் அவர்கள் தமிழகத்தின் ஆடும் மயில்!

கூவும் குயில்! குளிர்ந்தடிக்கும் தென்றல்!

அறிவுக் களஞ்சியம்.

மாற்றாருக்கு மந்தபுத்தி கொண்டவருக்கு அவர் கொட்டும் செந்தேள்!

சுழன்றடிக்கும் சூறாவளி!

சீறிப் பாயும் சிறுத்தை!

ஒருசேர கிளர்ந்தெழுந்து நின்ற எதிர்ப்புகள் பலவற்றையும் மறித்து நின்ற மாவீரன்!

சிங்க ஏறென முழங்கி நாடுநகரமெங்கும் சுற்றிச் சுழன்று வந்த திண்ணியர்!

சுயமரியாதை இயக்கத்தின் தூதுவர்! பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதிலே பற்றுமிகக் கொண்ட பண்பாளர்! தொண்டர்களின் தோழர்!

மானிடம் மருண்ட பார்வை உண்டு!

மயிலிடம் மனதை மயக்கும் ஆட்டம் உண்டு!

குயிலிடம் இனிய குரல் இயல்பாக உண்டு!

தேனிடம் இனிப்பு குடிகொண்டுள்ளது!

கனியிடம் சுவை மண்டிக் கிடக்கிறது!

கட்டழகியிடம் கவர்ச்சி காணப்படுகிறது!

மின்னும் பொன்னிடம் பொலிவு இருக்கக் காண்கிறோம்!

புரை தீர்ந்த புலமை வளம் மிகுந்த கற்பனையைப் பொழிகிறது!

இவைகள் அனைத்தும் இயற்கை...!

ஆனால் தமிழர்களின் இதயத்திலே நினைவாற்றல் என்னும் உளியால் "கலைஞர் மு. கருணாநிதி" என்னும் எழில்மிகு திருப்பெயர் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்த பிறகும் —கால வெள்ளத்தை எதிர்த்து அந்தப் புனிதமான பெயர் என்றென்றும் தமிழர்களின் நம்பிக்கை நாதமாக—வழிகாட்டும் நட்சத்திர ஒளியாக நின்று நிலவும்!

கலைஞரின் புகழ் வாழ்க!

அவர் தம் கொள்கை வெல்க!!

"போற்காலத் தலைமுறையில் போன்விழாத் தலைவன்"

இரா. நலங்கிள்ளி எம்.ஏ.,

வெற்றிக்குப் பாராட்டுவிழா!
வேதியர்க்கு ஓதும்விழா!
இறைவனுக்கு அருள்விழா!
இளமைக்கு மணவிழா!

பாட்டிற்கு அரங்கேற்றம்விழா!
படிப்பிற்கு பட்டமளிப்புவிழா!
பாடிபடும் ஏழையர்க்(கோ)—
பாவலனே தமிழ்க்காவலனே
நீவழங்கும் திட்டங்களே திருவிழா!

விழியிருந்தும் ஒளியிழந்தார்
அம்மக்கள்தம் வாழ்வினிலே
ஒளிபெற்று வாழ்ந்திடவே
கண்ணொளித் திட்டம்தந்தாய்!
கண்கள்பெற்ற மக்கள்உன்னை
கர்ணனென்று போற்றவில்லை...
கண்களாகப் போற்றுகின்றார்!

பிறர்க்கீயும் தமிழர்க்குடியில்
பிச்சையெடுத்தல் பிழையே யாகும்
என்றதன்பண்பை ஏழையின்தோழன்
நீயதை உணர்ந்திட—
எடுத்துத்தந்தாய் பிச்சைக்காரர்
மறுவாழ்வுத் திட்டம்!

மனிதனைமனிதன் மாடாய்ச்சுமக்கும்
மடமையின் போக்கினை
மாற்றிஅமைத்திட மற்றொருத்திட்டம்—
கைவண்டி இழுத்தவன்
கடுமையில் உழைப்பினும்
கால்பசியேத்தீரும்; கால்களும்சோறும்!
இன்னலைமாற்றி இத்தொழில்செய்வோர்
இன்புற்றுவாழ்ந்திட இழுவண்டித்தள்ளி
மிதிவண்டித் தந்தாய்!

உழைக்கின்ற உடம்பினிலே
ஊனங்கள் உண்டானதென்பதினால்
உழைத்துவாழ வழியேயின்றி
உயிர்வாழும் மக்களின்று
பிழைத்துவாழ திட்டம்தந்தாய்!

இதுபோன்றத் திட்டங்கள்தனை
இனிவரும் ஆண்டுகளில்
தொடர்ந்தார்ப்போல் தருகவென்று
தொழுதுஉன்னைக் கேட்டுக்கொண்டு—

பொற்காலத் தலைமுறையின்று
பொன்விழாத் தலைவன்நீ
நீடுழி வாழ்கவென்று
நிறைமனதாய் வாழ்த்துகின்றேன்
வாழ்க நீ பல்லாண்டு!

★★

திருவாரூர் காதலன்!

(கவிஞர். ஆத்தூர். பன்னீர்ச்செல்வன்)

திருக்குவளை நகர்தனிலே பிறந்த அத்தான்
தினந்தினமும் என்மனதை வாட்டு கின்றான்!
திருமணமோ புரியுங்கள் என்று சொன்னால்
தமிழ்மணமே என்றனுக்கு வேண்டும்!-உன்றன்
திருமணமோ பின்னர்தான் பார்ப்போம் என்று
தினந்தினமும் கூறியென்னை வாட்டு கின்றார்!
உருவான காதலுக்கு வழியைக் கேட்டால்
உயர்வான தமிழுக்கே வாழ்வேன் என்பார்!

நீங்களெனை கைவிட்டால் என்ன செய்வேன்?
நீங்கிடுமோ என்வாழ்வில் துயர கீதம்?
"நீங்காத துயருள்ளப் பிச்சைக் காரர்
நிம்மதியாய் வாழட்டும்" என்று ரைத்தார்!
நீங்காத துயரந்தான் நீங்கிப் போச்சே
நீங்களெனை இப்போது என்று கேட்டேன்.
பாங்காக அனைவருக்கும் பார்வை வேண்டும்
பார்ப்போமே அதன்பின்னால் என்று சொன்னார்.

இதயத்தில் குடிபுகுந்த மன்னா! நீங்கள்
எப்போது தங்களகம் என்னைக் கொள்வீர்?
இதயமாக இருக்கின்ற ஏழை மக்கள்
ஈரடுக்கு மாடிதனில் வாழும் பாங்கால்
இவயமெல்லாம் குளிரவேண்டும், பின்னர் என்றார்.
ஈரடுக்கு மாடிதனில் வாழ்ந்து விட்டார்
இதயமன்னா இப்போது, கேட்டேன் நானும்
"இல்லாமை" நீங்கட்டும் என்று சொன்னார்.

என்னாசை அத்தானையும் தேக்கி வைத்தே
ஏங்குகின்றேன், ஆனாலும் அவரோ நாட்டின்
இன்பத்தை ஒன்றொன்றாய் சுட்டிக் காட்டி
என்னையேன் துன்பத்தால் வாட்டு கின்றார்.
இன்பத்தைப் பற்றிநான் பேசி விட்டால்
யாருக்கு? நாட்டவர்க்கா? என்று சொன்னால்
என்னின்பம் எல்லாமே பொடியாய்ப் போக
ஏங்குகின்றேன் நாளெல்லாம் அவரை எண்ணி.

வாழி நீ முதல்வா!

N. சண்முகம்

ஜூன்—3 கலைஞர் பிறந்தநாள். நம் கழகத் தலைவன் பிறந்தநாள். "தமிழாந்த தமிழ்மகனே தமிழ் நாட்டின் முதலமைச்சனாய் வருதல்வேண்டும்" என புதுவை குயில் புரட்சிக் கவிஞர் கருதினார். எழுதினார். அவரின் எண்ணம் ஈடேற்றிய தமிழ் அறிந்த தலைமகன் அவதரித்த நாள். அருமைமிகு நாள். இந்நாளில் அவர் சந்தித்த எதிர்ப்புதான் எத்தனை? அந்த எதிர்ப்பிலே அவர் செய்த சாதனைகள்தான் எத்தனை? அது மற்றவர்களுக்கு ஏன் வேதனையாக இருக்கிறது.

தியாகத்தின் மொத்த உருவமாய் காட்சி அளிக்கும் அந்த முதல்வனை பார்க்கும் பொழுது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜான். எப். கென்னடி கூறியது என் நினைவுக்கு வருகிறது. "நாடு உனக்கு என்ன செய்தது எனக் கேட்காதே; நீ அதற்கு என்ன செய்தாய் எனக் கேள்." ஆம். அந்த உரைக்கு ஏற்றவனாக நாட்டுக்கும், கட்சிக்கும் உழைக்கின்ற உத்தம தலைவனே இந்த நாளில் எங்கள் நினைவுகள் சிறிது பின்னோக்கி செல்லுகிறது.

சின்னச் சிறுவயதிலேயே "எப்பக்கம் வந்திடும் இந்தி" என இந்தி எதிர்ப்பினை செய்தவன் நீயல்லவா?

இல்லறம் என நல்லறத்தால் பிணைக்கப்பட்ட மனைவி இறக்கும் தருவாயில் இருக்கும்பொழுது அவள் அருகில் அமர்ந்து ஆசை மொழிகளை பேச மறந்து. ஆறுதல் தரவும் முடியாமல் ஒப்புக் கொண்டபடி கழகத்தின் கூட்டத்தில் பேசுவதே என் பணி என கருதி அதன்படி நடந்து கொண்ட தனக்கென வாழா தன்மானத்தமிழன்.

ஈரோட்டு சிங்கம், வெண்தாடி வேந்தன், பகுத்தறிவு பகலவன் ஈ. வெ. ராவின் வளர்ப்பு மகனே! அறிவு செல்வமே!

"டால்மியாபுரம்" பெயர் மாற்ற போராட்டத் திற்காக கழகத்தின் சார்பிலே உயிர்போயினும் கவலையில்லை, அச்சமில்லை என துணிந்து தண்டவாளத்தில் தலை வைத்து படுத்த 'கல்லக்குடி கொண்டானே!"

கண்ணியமற்ற கயவர்களால் புதுவையிலே நீ தாக்கப்பட்டு, சாக்கடைக்கு அருகே நீ இருந்ததை எண்ணும் பொழுது என் நெஞ்சம் விம்முகிறது.

பாதுகாப்பு சட்டத்தின்படி தமிழகத்தில் கைது செய்யப்பட்ட முதல் கழகக் கண்மணி. தனிமை யான அறையிலே, பேச துணைக்குக்கூட ஆள் இன்றி பாளையங்கோட்டை சிறையிலே நீ இருந்த நாட்கள் எத்தனை? பட்ட துயரங்கள், துன்பங்கள்தான் எத்தனை? தியாகத்தின் உருவமல்லவா நீ.

"தம்பி! என் மனைவிக்கு நகை வாங்ககூட நான் கடைக்கு சென்றதில்லை. உனக்காகத்தான் கடைக்கு சென்று இந்த கணையாழியை நானே வாங்கினேன்" என்று அகம் மலர முகம் மலர, உள்ளத்தில் உவகை யோடு வங்க கடலோரம் தங்க நிகரென சந்தன பேழையில் உறங்கும் தமிழ்மகன் பேரறிஞர் அண்ணா உன் விரலில் அணிந்து இருக்கும் கணையாழி ஒன்று போதும் நீ அண்ணாவின் உண்மைத்தம்பி என்று சான்று பகர. உண்மை அறிய.

பேரறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டில் நீ அரியணை ஏறினாய். ஆட்சி புரிக்கின்றாய். வறுமை பிணி அகல, ஏற்றமிகு எதிர்காலம் அமைக்க, வாட்டம் போக்கிட, தமிழ் ஏற்றம் பெற்றிட நீ செய்கின்ற பணிகள், அறிவிக்கும் திட்டங்கள், செயல் ஆற்றும் திறன் இவைகள் எண்ணுந்தோறும் உள்ளத்தை உவகைகொள்ள செய்கின்றன.

முப்புறமும் கடலால் சூழப்பட்டு உள்ள நமது பாரதத்தின் தலைமை அமைச்சர் பிரதமர் இந்திரா அம்மையாருக்கு நீ சிம்ம சொப்பனமாய் காட்சி தருகிறாய்.

கழகத்தாலே வளர்ச்சி பெற்றவர்கள், வசதி பெற்றவர்கள் கட்சி கட்டுப்பாட்டை மீறுகின்ற சமயத்தில் அவர்கள் மக்களிடத்தில் எவ்வளவுதான் செல்வாக்கு பெற்று இருப்பினும் கட்சியிலிருந்து தூக்கி எறியும் உன் துணிவு நீ "கழகத் தலைவன்" என்பதை பறைசாற்றுகிறது. கட்சிக்கு கட்டுப்பாடு தான் முக்கியம் என்ற உன் கருத்துக்கு நாங்கள் தலை வணங்குகிறோம்.

"உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்" என்ன அருமையான நற்கருத்து உன் கருத்து.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவிற்கு விழாவா, இராம காவியத்தை தந்த கம்பனுக்கு விழாவா, ஜோதி வடிவமாய் காட்சி தருபவன் இறைவன் என பாடிய வள்ள லாருக்கு விழாவா, இல்லை முல்லைக்கு தேர் ஈந்தானே பறம்புமலை பாரிக்கு விழாவா எங்கெங்கு தமிழ் மணம் கமழ்கின்றதோ அங்கெல்லாம் சிம்ம கர்சனையை புரிகின்ற தமிழ் அறிந்த தமிழ்மகன், தலைமகன்.

படித்தோரும், பாமரரும் அறியும் வண்ணம் எளிய தமிழில் இனிமை மொழியில் இன்பக் கவிதை கருத்துமிகு கவிதை தருகின்ற "உலக மகாகவிஞன்"

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றான் கவிஞன். கவிஞனின் எண்ணத்தை ஈடேற்ற தமிழ்மொழியின் பெருமைதனை, சிறப்பினை, உயர்வினை ஊரெல்லாம், பாரெல்லாம் பரப்பி வருவதை தன் தலையாய கடமையாக கொண்ட 'தமிழ்வேள்."

அறியாமை எனும் நோயினால் பாதிக்கப்பட்டு அதில் சிக்கி தவித்து மீள முடியாமல் அறிவுபெற இயலாமல் இருக்கின்றவர்களுக்கு, தவிப்பவர்களுக்கு தம் ஏற்றமிகு எழத்தாலே நோய் தீர்க்கும் "டாக்டர்."

கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

தலைமையகம்: ஸ்டேட் பேங்க் சாலை, :: கோவை - 641018.

தந்தி: கோடிஸ்ட்பேங்
தொலைபேசி எண். 33447 [மூன்று லைன்] மொத்தம் கிளைகள் 32.

நிரந்தர வைப்புகளுக்கு வழங்கும் வட்டி விபரம்

நடப்பு கணக்கு ½% சேமிப்பு கணக்கு 5¼%
நிரந்தர வைப்புக்கு 5¼% முதல் 8½%.

அத்துடன்

ரெக்கரிங், பிராவிடெண்டு, மினிடெப்பாசிட், கேஷ் சர்டிபிகேட் போன்ற சிறப்பு சேமிப்புகளுக்கு அணுகவும்.

குறிப்பு: கொடை நிறுவனங்கள், மத நிறுவனங்கள், மற்றும் கல்வி நிறுவனங்கள் (Charitable, Religious Institutions) நிரந்தர வைப்புகளின் பேரில் மேலே காணப்படும் வட்டி விகிதத்திற்குமேல் ¾% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

நிரந்தர வைப்புக்கு வட்டி மாதாமாதம் கொடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராசா, எம்.ஏ., எம்.எல்.ஏ., பெருந்தலைவர்.

திரு. எம். பழனிசாமி, பி.காம்., எச்.டி.சி., செயலாளர்.

"மாநில சுயாட்சி" எனும் உயரிய ஒப்பற்ற கொள்கைக்காக, லட்சியத்திற்காக, உரிமைக்காக என் உயிரையும் தரத்தயார் என கூறுகின்ற கொள்கை பிடிப்பு கொண்ட எம் இதய மன்னன்.

லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு எனது முதலமைச்சர் பதவி இன்னல் தருமானால் அதனை உதறிவிட்டு போராடவும், சிறைசெல்லவும் நான் தயங்கவில்லை எனக் கூறுகின்ற தன்னலம் கருதாதவன்.

அஞ்சுகத்தாய் ஈன்றெடுத்த எங்கள் அருமை தலைவா! உன் பிறந்தநாளில் நீ அறிவிக்கும் திட்டங்கள், செயல்கள் எம்மை இன்பக் கடலில் மூழ்க செய்கிறது.

உழைப்பதற்கு உடலிலே சத்து இன்றி, நோயால் பிணிக்கப்பட்டு இருக்கும் அனாதைகளுக்கு, பிச்சைகாரர்களுக்கு, குஷ்டரோகிகளுக்கு- அவர்கள் வாழ்வில் தென்றல் வீச, வாழ்வு சிறக்க பிச்சைகாரர் மறுவாழ்வு திட்டம். அதற்கென தனி அமைச்சர்.

காலத்தின் தன்மையாலும், வயதின் முதிர்ச்சியாலும் கண் பார்வை அற்றவர்களுக்கு, குறைந்தவர்களுக்கு இலவசமாக கண்ணொளி பெறும் வண்ணம் செய்த உன் அரிய திட்டம்தான் எத்தனை சிறப்பு வாய்ந்தது.

"நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்றான் பாரதி. அந்த மனிதன் மற்றொரு மனிதனை அமரச் செய்து இழுத்து செல்லும் கொடுமை நீங்கிட, அவர் நிலை ஏற்றம் பெற்றிட "சைக்கிள் ரிக்ஷா" வழங்கும் திட்டத்தைகொண்டு வந்தாய்.

இவ்வாண்டு, உடலிலே ஊனம் கொண்டு, உறுதிகொண்ட நெஞ்சினராய் இருப்பவர்களின் எதிர்காலம் ஏற்றம்பெற, எழுச்சியுற பல்வேறு உதவிகள், வேலைவாய்ப்பு வசதிகள் அளிக்கின்ற உயர்ந்த சிறந்த திட்டத்தை நீ வெளியிட்டு உள்ளாய்.

இதுபோல் ஆண்டுதோறும் உன் பிறந்தநாள் மற்றவர்களுக்கு களிப்பூட்டும் நாளாக இருப்பதை கண்டு நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

சமீபத்தில் வெளிவந்த ஒரு செய்தியில் இந்தியாவிலேயே உணவு உற்பத்தியில் முதலிடம் வைக்கும் மாநிலம் தமிழ்நாடு என்பதை படிக்கும் பொழுது எங்கள் அகம் எவ்வளவு மலர்ந்து உள்ளது தெரியுமா?

உழைப்பாலே உயர்ந்த உத்தம தலைவனே! நல்லோரின் சீரிய வழியில் சத்தியத்தின் துணை கொண்டு பேரறிஞர் அண்ணாவின் தாரக மந்திரமாம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளை காத்து மாற்றாரின் தூற்றுதலை கண்டு அதனால்தான் மேற்கொண்ட பணியில் சோர்வு கொள்ளாமல் "தமிழ்நாடு தலைநிமிர்ந்து தரணிதனில் நிற்க வேண்டும்;" தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்பதை உலகுக்கு உணர்த்த அவர்களை உயர்த்த அயராது உழைத்துவரும் எங்கள் முதல்வனே! தங்கநிகர் கழகத் தலைவனே! நீ வாழி!

அமிழ்தினும் இனிய மொழியாம் தமிழ்மொழி போல் நீ என்றும் சிறப்புற்று விளங்கவேண்டும்—உன் புகழ் மணக்க வேண்டும்.

உன் பிறந்த நாட்கள் வரட்டும். அது எம் தொல்லைகளை தகர்க்க வழி வகுக்கட்டும். தமிழக மக்களின் உண்மை குரல் இதுதான்.

கூட்டுறவு மைய வங்கி லிட்., வேலூர்.

(வட ஆற்காடு மாவட்டம்)

தலைமையகம் : நெ. 1, தொரப்பாடி ரோடு, வேலூர், வ. ஆ.

காலம்	நிரந்தர வைப்புத் தொகைக்காக வட்டி விகிதங்கள் வட்டி
3 மாத முதல் 6 மாதங்கள் வரை	5 : 50
6 மாத முதல் 12 மாதங்கள் வரை	6 : 50
12 மாத முதல் 24 மாதங்கள் வரை	7 : 00
24 மாத முதல் 36 மாதங்கள் வரை	7 : 50
36 மாத முதல் 60 மாதங்கள் வரை	7 : 75
60 மாத முதல் 84 மாதங்கள் வரை	8 : 25
84 மாதங்களுக்கு மேற்கொண்டு	8 : 50

மத ஸ்தாபனங்களுக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும் கூடுதலாக விசேஷ வட்டி ½ சதவிகிதம் வழங்கப்படும்.

எல்லாவித டெபாசிட்டுகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

எமது 32 கிளைகளில்

தங்கம், பொன் நகைகளின்மீதும் கடன் வழங்குகின்றோம்.

மேலும் பல விசேட சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களும், பொதுமக்களும் மேற்படி எல்லா சலுகைகளையும் பெற்று பயனடையும்படி வேண்டுகின்றோம்.

ஆர். செல்வின், பி.எஸ்சி., பி.காம்.,
செயலாளர்.

முல்லை பொ. வடிவேல்,
பெருந்தலைவர்.

கி. நடராசன், பி.காம்,.
இணைப் பதிவாளர்-தலைமை நிர்வாக அதிகாரி.

வேலம் தம்பிதாசன்,
துணைத் தலைவர்.

போன் : 438

வேலூர் பாத்திர தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட், C. No. 1497

45, காந்தி ரோடு :: வேலூர் (வ. ஆ.)

கூட்டுறவு சங்கத்திற்கு அடிக்கல் நம்பிக்கை. அந்த நம்பிக்கை வீணாகாமல் தரமான செம்பு, பித்தளை மற்றும் கல்யாண செட்டு சாமான்கள் நியாயமான விலையில் வாங்க சிறந்ததோர் இடம் எங்கள் சங்கம். தேவையான பித்தளை, செம்பு சாமான்கள் ஆர்டர்களின் பேரில் குறித்த நேரத்தில் சப்ளை செய்வதும் இச்சங்கம்.

இப்படிக்கு,

மா. பா. சாரதி, M.L.A.,
தலைவர்.

பல்லாண்டு வாழ்வீர்!

(கடலாடி ந. சுப்பிரமணியன்)

வாடுதுகாண் தமிழ்மொழி வதையுதுகாண்
தமிழினம்
வளருதுகாண் வறுமை தேயுதுகாண் தமிழகம்
தேடுதுகாண் உணவு நாடுதுகாண் மறைவிடம்
திரியுதுகாண் இளமை தீர்ந்ததுகாண் மானம்.

என்றன்றே காஞ்சி மண்ணுதித்த அண்ணா
ஏக்கமிட்டு முழங்க இழிமனத்தோர் தூற்ற
நன்றண்ணா என்றே வெள்ளைத்தாள் எடுத்து
நல்லவற்றை தொகுத்து நாடோறும் எழுதி

வெட்டிவரு கவென்றால் கட்டிவரும் தம்பியாய்
வென்றுவிட்டார் கலைஞர் அண்ணாவின் அன்பை.
தொட்டுவிட்டால் எழுதுகோல், தூளாகும்
எதிர்மொழி
தொடர்ந்தபடி இருபொருள் துலங்கத்தான்
எழுதும்.

கட்டிப்போ டுகின்ற அழகான பேச்சு
காதாற கேட்கலாம் இவர்களிடம்; பிறரைத்
திட்டிப்பே சுகின்ற தீக்குணத்தை இருவரும்
தீண்டாத இயல்பினர்; திகட்டாத பேச்சினர்.

ஆண்டைந்து ஆயின அண்ணாவை இழந்து
ஆதரவாய்க் கண்டோம் கலைஞரையே என்றும்.
வேண்டுவன தந்தார் ஏழையைப் பார்த்து
விழிநீரைத் துடைத்தார் வேதனையைத்
தீர்த்தார்

பிச்சையை ஒழித்திட கண்குருடு தீர்த்திட
பிறந்தநாளில் திட்டம் தீட்டியவர் கலைஞர்!
எச்செயலும் அண்ணன் எழுதிவைத்த வழியில்
ஏழைக்காய் செய்யும் ஏந்தலும்நம் கலைஞர்!

உட லூனம் ஒழித்திட உழைக்கின்ற கலைஞர்,
உள்ளத்தில் ஊனம் தோன்றாது காப்போம்.
அடலேறாய் அண்ணன் வழிநடக்கும் அவருடன்
அயராது உழைப்போம் சுயாட்சிதனைப் பெறவே

ஐம்பதையும் கடந்தீர்; ஐம்படையும் வென்றீர்!
அவனியெல்லாம் போற்ற பல்லாண்டு வாழ்வீர்!
ஐம்பத்தொன் றினில்நீர் வென்றிடுவீர் பகையை,
ஐயமில்லை! கலைஞரே! அண்ணாவின் தம்பியே!

தமிழக முதல்வரின் 51-வது பிறந்த நாளில் எங்கள் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

விற்பனைக்குத் தயார்!

"அரசியல் உலகில் அண்ணா"

(தொகுப்பு: சி. என். ஏ. பாபு)

சட்டமன்ற, இலக்கிய அரசியல் ஆகிய சொற்பொழிவுகளைத் தாங்கி சிறந்த நூலாக வெளிவந்திருக்கிறது.

காலத்தால் போற்றப்படும் கருத்துக் கருவூலம் எந்த மொழியினரும், எந்த நாட்டவரும் விரும்பும் கருத்துப் பெட்டகம். நிறைந்த பக்கங்களைத் தாங்கி குறைந்த விலையோடு வெளிவந்துள்ளன!

விலை ரூ. 4/– (நான்கேதான்)

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
"பாபு பதிப்பகம்"
168, ஜோன்சு சாலை,
சைதை, சென்னை–15.

சேலம் கூட்டுறவு மத்திய வங்கி, எண். 151.

சேலம்-1.

தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, B. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்த நாய்க்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி, மல்லூர், எருமைப்பட்டி, தலைவாசல்.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

கால் டெபாசிட்டுகள் :

ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	3¼%
ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்	3½%

சீசன் டெபாசிட்டுகள் :

ரூ 1,000-க்கும் அதற்கு மேலும்

15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும்	4%
31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும்	4½%

பிக்சட் டெபாசிட்டுகள் :

ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு :

91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள்	5½%
6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள்	6%
12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள்	6¾%
24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள்	7¼%
36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள்	7½%
5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள்	7¾%
6 வருடங்களுக்கும் அதற்குமேலும்	8%

நடப்பு கணக்கு ½% சேமிப்பு கணக்கு 4½%

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின்பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், M.L.A., தலைவர்.

எம். ஐயனார், நிர்வாக அலுவலர்.

அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்.

காஞ்சிபுரம்-1.



புற்றுநோயை ஆரம்ப அறிகுறிகள் தெரிவதற்கு முன்பே கண்டுபிடித்தால் குணப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும். நலமுடன் இருக்கும்போதே கருப்பை மற்றும் வாய்புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதற்கான இலவசப் பரிசோதனையைச் செய்து கொண்டு பயனடையுங்கள்.

தலைமை மருத்துவ அதிகாரி,
அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்,
ரயில்வே ரோடு, காஞ்சிபுரம்-1.

போன் ; **827**

வேலூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி லிட்.,

3, இன்பென்டரி ரோடு, வேலூர் வ. ஆ.

வங்கி ஆரம்ப தேதி	:	1—5—1937	
		A	B
வங்கியின் தற்போதைய அங்கத்தினர்கள்	:	3050	9751
செலுத்தப்பட்ட மூலதனம்	:	ரூ. 7,16,271	
அரசினர் பங்கு மூலதனம்	:	ரூ. 50,000	
அங்கத்தினர் கடன் நிலுவை	:	ரூ. 98,73,580	
இதுவரை வழங்கப்பட்ட புதிய கிணறுகள்	:	880	
பம்ப்செட்டுகள்	:	860	
டிராக்டர்கள்	:	14	

வேலூர், கணியம்பாடி, காட்பாடி வட்டார விவசாய பெருங்குடி மக்களுக்கு புதிய கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகள் ஆழம்வெட்டி கட்டிடம் கட்டவும், டிராக்டர் வாங்கவும், நில சீர்திருத்தம் செய்யவும், கரும்பு ஆலை வாங்கவும் நீண்ட கால கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கடன் பெற்று பயன் அடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கி. கல்யாணசுந்தரம், செயலாளர்.

மா. பா. சாரதி, M. L. A., தலைவர்.

தமிழ் மக்களின் தன்னிகரில்லாத் தலைவர்
தமிழாய்ந்த டாக்டர் கலைஞர் பல்லாண்டு வாழ்க!

தொலைபேசி: 43 & 493 தந்தி: செம்ஸ்டோர்ஸ்.

வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம் லிட்.,

இராஜகோபால் நிலையம், : வேலூர் 632001.

★

பிரிவுகள்:

தொலை பேசி: 807 தந்தி: "கற்பகம்"

"கற்பகம்" கூட்டுறவு சிறப்பு அங்காடி, வேலூர்.

(வட ஆற்காடு மாவட்டத்தின் மிகப்பெரிய பல்பொருள் விற்பனைக் கூடம்).

★

தொலை பேசி: 812 தந்தி: நேஃப்கோ

கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர்.

(உலகெங்கும் புகழ்பெற்ற கனிரசத் தயாரிப்பு ஆலை).

பெட்ரோல் விற்பனை நிலையம்,

ஆபிசர்ஸ் லேன், :: வேலூர்.

மற்றும்
மாவட்டத்தின் எல்லா முக்கிய நகரங்களிலும்
சில்லரை விற்பனைக் கூடங்கள்.

எஸ். தாமோதரன், எம். டிப். எச். டி. சி.
துணைப்பதிவாளர்/செயலர் (பொறுப்பு).

ர. சம்பங்கி,
தலைவர்.

குடும்ப விளக்கு என்றும் எரிய
குடும்ப நலத் திட்டம் உதவும்!

★

**"சாவதற்கோ பிள்ளை தவிப்பதற்கோ பிள்ளை
காதலுக்கு வழி வகுத்து கருப்பாதைச் சாத்தக்
காதவொன்று கண்டறிவோம்!"**

— பாரதிதாசன்.

அளவின்றிக் குழந்தைகளைப் பெற்றவர்கள்
அளவில்லாத் துன்பம் அடைவதைக் கண்ட
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்
குடும்ப நலத்திட்டத்தை வலியுறுத்த
"குடும்ப விளக்கு" என்னும் நூலில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எனவே,

உங்கள் "குடும்ப விளக்கு" என்றும் அணையாதிருக்க
ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட பிறகு
அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்:

கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளலாம்!

அல்லது வழக்கில் இருந்துவரும் கருத்தடைச்
சாதனங்களைப் பயன்படுத்தலாம்!

இது பற்றி மேலும் மேலும் விவரம் அறிய உங்கள் அருகாமையில் உள்ள

குடும்ப நலத்திட்ட நிலையத்தை அணுகுங்கள்.

-குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ESTD: 1930 Phone: { 21784 / 27888

MADRAS CENTRAL CO-OPERATIVE BANK LTD.,

13/14, Mukkur Nallamuthu Chetty St.,

MADRAS-600001.

BRANCHES

Washermanpet	....	483, T. H. Road, Madras-600021	552503
Perambur	...	78, Madhavaram High Road, Madras-600011	64448
T' Nagar	...	10, Usman Road, Madras-600017	444957
Mylapore	...	22, North Mada Street, Madras-600004	73321
Purasawalkam	...	38, Purasawalkam High Road, Madras-600007	665642
Triplicane	...	27, Pycrofts Road, Madras-600005	812371
Saidapet	...	85, Jeenis Road, Madras-600015	442006
Ayanavaram	...	125/5, Konnur High Road, Madras-600023	666175

AUTHORISED CAPITAL: Rs. One crores. WORKING CAPITAL EXCEEDS Rs. Ten crores

ALL KINDS OF DEPOSITS ACCEPTED

Current Deposit: ½% Savings Deposit 5½%

Children Savings Scheme --- 6%

SEASON DEPOSITS OF Rs. 1,000/- and over

For 15 days and over but less than		46 days	3¼%
For 46	-do-	91 „	3¾%

FIXED DEPOSITS:

91 days and over but less than		6 months	5½%
6 months	-do-	9 „	6%
9 „	-do-	1 year	6¾%
1 year	-do-	2 years	7¼%
2 years	-do-	3 „	8%
3 „	-do- and upto and inclusive of 5 years		8¼%
Above 5 years			8½%

For Fixed deposit of Charitable, Religious, and Educational institutions ½% over the above scheduled rates will be allowed.

Interest on Fixed Deposit is paid monthly at the request of the Depositor.

Fixed Deposits for a period of 3 years and above (both principal & interest) are fully guaranteed by Government of Tamil Nadu.

Interest earned on Fixed Deposits upto Rs. 3,000/- in a year including interest on other taxable securities is free of Income Tax.

Deposits upto Rs. 1.5 lakhs are free from Wealth Tax.

RECURRING DEPOSITS

Rs. 10 per	12	24	36	48	60	72	84
month	125	260	407	565	735	915	1110

Further details can be had from the Secretary/Branch Agents.

T. V. Natesa Mudaliar, B.A.,
CHAIRMAN.

P. Thangaraju, M.A., B.L.,
SECRETARY.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என் ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. (போன் : 2970)